# தமிழர் தகவல்

# Tamils' Information

பெப்ரவரி 2004
இலண்டன்



மாத சோதிடம்
உள்ளே!

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

# Vahizan Disc World



**Get up to 10% off !!!** **From our online shopping!!!**



## வாகீசன் டிஸ்க் வேள்ட்

எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டிவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக்குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு. இவற்றை விட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப்பாடல்கள், கர்னாடகவார்த்தியஇசைகள் யாவும் **MP3,AUDIO CD, CASSETTE** ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.

WE SELL TITLES FROM INRECO,GEETHANJALI,VEDU, RPG,AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES!



Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com









Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com





# THARANI JEWELLERY

எத்தனை நகை மாளிகைகள் எழுந்து வந்தாலும் அத்தனையையும் விஞ்சி ஆதரவு பெற்ற அனைவர் தெரிவும் தாரணியே.

**54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ**
**Tel : 020 8902 7111, 020 8902 6777**

# தமிழர் தகவல் Tamils' Information

பெப்ரவரி 2004 மலர்: 02 இதழ்: 08


"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." –குறள்

## கயமையும் காழ்ப்புகளும் களைந்து போகுமா?

பள்ளிக்கூடக் காலத்தில் ஒரு கதை படித்ததாக ஞாபகம். அதன் உண்மையான வரிகள் இன்றும் நினைவில் நிற்கின்றன. ஒரு பெரிய காடு. வளமுள்ள அந்த நிலத்தில் மரங்கள் வளர்ந்து அடர்ந்து நிற்கின்றன. பெரியவை என்றும் சிறியவை என்றும் காலத்தால் முதிர்ந்து நிற்கின்றன. மெலிந்தும் பருத்தும் விதம் விதமாய் காட்சி தருகின்றன. பெரிய மரங்களும், சிறிய மரங்களும் பேசிக் களித்துக் கொண்டன. அந்தக் களிப்பிடையே ஒருநாள், ஒரு சிறிய மரம், பெரிய மரத்தைப் பார்த்துப் பயத்துடன் கூச்சலிட்டது. "அண்ணே! அதோ ஒருவன் நம்மை நோக்கி வருகிறான். அவன் கையில் ஆயுதமொன்று ஆபத்தானதாகத் தோன்றுகிறது. பயமாக இருக்கிறது" எனப் பரிதவித்தது. பெரிய மரம் உற்றுப் பார்த்துவிட்டுச் சொன்னது; "வருகிற மனிதனைப் பார்! அவனிடம் ஆயுதம் மட்டுமே இருக்கிறது. இன்று அதனால் ஆபத்து வரப்போவதில்லை" என்று. மரங்களை ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்த அந்த மனிதன் வந்தவழியே திரும்பிப் போனான். சின்ன மரம் ஆறுதலடைந்தது. அடுத்த நாள். அதே வேளை. அதே மனிதன். அதே காட்டினை நோக்கி வேகமாக வருகிறான். அவன் கையில்...

சின்ன மரம் இப்போது சிலிர்த்துக் கொண்டது. பெரிய மரத்தைக் கூவி அழைத்தது. "அண்ணே! அதோ அவன்... அவன் நம்மை நோக்கி வருகிறான்" என்றது. பெரிய மரம் இப்போது தன் தலையை நீட்டி எட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னது; "தம்பி! இன்று நம் காலம் முடிந்தது. எல்லாருக்கும் இனிக்கேடுதான். ஏனெனில் நம்மவன் ஒருவன் அம்மனிதனுடன் சேர்ந்து கொண்டுவிட்டான். ஆபத்து நம் தலைக்கு வருகிறது என அங்கலாய்த்தது, வேதனைப்பட்டது". காரணம் முன்பு வெறும் கோடரியுடன் மட்டும் வந்த மனிதனால் மரங்களுக்கு ஆபத்து நேரிடவில்லை. ஆனால் இப்போ கோடரிக்கு மரத்தினாலான ஒருபிடி போடப்பட்டிருக்கிறது. இனி மனிதனால் மரங்களை வெட்டி வீழ்த்தி விட முடியும். பெரிய மரம் வேதனைப்பட்டுச் சொன்னது இதுதான்.

சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த இந்த நேரத்தில் கோடரிக்குக் காம்பாகிப் போகும் கைங்கரியத்தைத் தான் நமது அரசியல் தலைவர்கள் சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். செய்ய முன் நிற்கிறார்கள். காட்டிடை மரங்களாகத் தமிழ் மக்களை நினைத்துக் கொண்டால் கோடரிக்காம்பாக யாரை எண்ண வேண்டும்? இன்னும் 'விமர்சனம்' தான் இவர்களின் வழி என்றால் பாதையை மாற்ற வேண்டியதுதான். அதனுடைய பதில் வேறாகத்தான் இருக்கவேண்டும்.

தனித்து, விழித்து, பசித்து, நலிந்து, அழிந்து அல்லற்படும் தமிழர்கட்கு ஒற்றுமைதான் இன்று புதிய விடிவைத்தரும். இப்போதும் விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தால் - வேண்டுமென்றே நொடித்துக் கொண்டிருந்தால் அவர்கள் நிச்சயமாகத் துரோகிகள்தான், அதில் எவ்விதமான சந்தேகமுமில்லை.

*"எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா*
*மாணாசெய் யாமை தலை."* – குறள் 317

– ஆசிரியர்


முகவரி:
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி:
020 8480 3320

வெளியீடு:
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

பதிப்பாசிரியர்:
நா. சிவானந்தசோதி
Publisher:
N. Sivananthasothy

ஆசிரியர்:
அரவிந்தன்
Editor:
Aravinthan



வங்கி:
H.S.B.C.
A/C Name: TAMILS' INFORMATION
SORT CODE: 40-35-30
A/C No.: 81437100

கணனி, அச்சுப்பதிப்பு:
வாசன் அச்சகம்
Computering & Printing:
Vasan Printers

£ 6.00 தபாற் செலவை
மேற்படி வங்கியில்
செலுத்தின்
வருடம் முழுவதும்
"தமிழர் தகவல்"
உங்கள்
இல்லம்தேடி வரும்.



படைப்புகள்,
ஆக்கியோரின்
உரிமைகளே.


தமிழர்களே! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்!

வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

## நிகழ்வுகள் - நடந்தவை:

(1) **தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுப் படுகொலைகள் பற்றிய நினைவுகள்:-** 1974ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின்போது சிங்கள ஆதிக்க அரசினால் மேற்கொள்ளப்பட்ட பதினொரு படுகொலைகளின் ஞாபகார்த்தக் கருத்தரங்கொன்று கடந்த 11-01-2004 அன்று ரூட்டிங் அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் உணர்வாளர்கள் பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வுக்கு பழம்பெரும் அரசியல் விற்பன்னரான ஆவரங்கால் சின்னத்துரை அவர்கள் தலைமை தாங்கினார்கள். ஈழப்போராட்டத்தின் வித்தூன்றிகளும் முக்கியமானவரான திரு. சத்தியசீலன் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. ஆக்கபூர்வமான பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தற்போதைய தமிழ் வரிவடிவங்களில் உள்ள குறைபீடுகளை நீக்கி ஒரு புதிய வடிவமைப்பை ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்தேவை பற்றி இதில் ஆராயப்பட்டது. இதற்கு விளக்கம் தந்தவர் திரு. சிறீசலந்தீஸ்வரன். மிகவும் பயனுடையதான இந்தச்சந்திப்பை செல்வி. அங்கயற்கண்ணி அவர்கள் நெறிப்படுத்தினார். அவரது அயராத தமிழ்ப்பணிக்கு 'தமிழர் தகவல்' தனது வாழ்த்துக்களைத் தருகிறது.

(2) இலண்டனின் கடந்த 18-01-2004 அன்று மாலை லூசியம் கோல்ட் ஸ்மித் மண்டபத்தில் நான்கு நாடகங்கள் ஒரே மேடையில் நடைபெற்றது. நான்கும் நன்கு திட்டமிட்டு ஒழுங்காக நெறிப்படுத்தப்பட்டிருந்தன. பாரிஸ் கலைஞர்களின் T. சாம்சன் வழங்கிய அருந்ததியின் 'இன்னொரு மனிதன்', சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி வழங்கும் ஊரெழுவூர் சண்ணின் 'ஆடுகளம்', லண்டன் அரங்காற்றுக்குழு வழங்கும் ஏ.ஜீ. யோகராயாவின் 'மயான காண்டம் II', A. ரகுநாதன் வழங்கிய தா. பாலகணேசனின் 'பொற்கூண்டு', சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரியின் 'அம்மையே அப்பா ஒப்பிலாமணியே' என்பன. சமகாலப் பிரச்சனைகளை மிகவும் நிதர்சனமாக மக்கள் முன் காட்டிய இந்நாடகங்கள் சபையோரால் அமோகமாக வரவேற்கப்பட்டன. 'ஆடுகளம்' இலங்கை அரசின் உள்ளார்ந்த நிலையை முன்நிறுத்தி நம்மவர் சிலரிடம் உள்ள மயக்கத்துக்கு ஒரு மருந்தாக அமைந்தது. 'மயான காண்டம் II' செம்மணியில் சிதைவுற்ற எம் உறவுகளின் புதைகுழிகளைக் கண்முன் நிறுத்தியது. 'அம்மையே அப்பா ஒப்பிலாமணியே' என்பது புலம்பெயர்ந்த எம் குடும்பங்களிடையே ஏற்பட்டுவரும் சிதைவுகளைக் கண்முன் நிறுத்தியது. 'இன்னொரு மனிதன்' அற்புதமான ஒரு பிரதிபலிப்பு. 'பொற்கூண்டு' நம் மூத்தோர் படும் சில வேதனைகளை வெளிக்கொணர்ந்தது.

இப்படி எல்லாமே நம் சமகால - கடந்தகால நிகழ்வுகளின் பிரதிபலிப்புகள்தான். எனினும் இவை நமக்குப் பாடமாகவும் அமையும் தன்மை கொண்டவை. எளியநடையில் இவை வெளிக்கொணரப்பட்டன. அத்துடன் குறிப்பிட்ட நேரக் கட்டுப்பாடுகளுடனும் நடைபெற்றன. முக்கியமாக 'அம்மையே அப்பா ஒப்பிலாமணியே' என்ற நாடகம் ஒரு வில்லுப்பாட்டின் விளக்கத்துடன் இருந்தது. இது ஒரு புதிய உத்தியெனலாம். எத்தனையோ இடர்ப்பாடுகளின் நடுவிலும் நம்மவர்கள் நாடகத் துறையை புதிய பார்வையுடன் மேற்கொண்டு வருவதைப் பாராட்டலாம். முக்கியமாக இந்நாடகங்களின் நெறிப்படுத்துதலில் பெரும்பங்காற்றிய திரு. அன்ரன் பொன்ராசா அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அதேவேளை இவைகட்கு எல்லாம் மூலகர்த்தாவான எம் பழம்பெரும் ஆசிரியர் - ஈழக்கூத்தன் தாசீசியஸ் அவர்களைத் தமிழினம் நினைவில் வைத்திருக்கும். அவரது தொடரான வழிகாட்டல்கள்தான் இளைஞர்களின் இந்த விழிப்புக்கு வித்திட்டு வருகின்றன. இந்நாடகங்களை மேடையில் சபையினர்க்கு நன்கு அறிமுகப்படுத்திய நமது கலைஞர் கிருஷ்ணராசா அவர்கள் மிகவும் சுருக்கமான ஒரு வழிமுறையைக் கைக்கொண்டமை ஒரு வழிகாட்டுதலின் முன்னோடித்தன்மையாகும். இந்நிகழ்வின் இறுதியில் "தேம்ஸ் நதிக்கரையின் பூவரசம் பூக்கள்" எனும் மலர் வெளியீட்டின் முதற் பிரதியை லண்டன் குமரன்ஸ் உரிமையாளர் திரு. மகேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

## நிகழ்வுகள் - நடக்கவிருப்பவை:

(1) **ஈழவர் திரைவிருந்து:-** ஈழவர் திரைக்கலை மன்றத்தின் 'ஈழவர் திரை விருந்து' நான்கு குறும்படங்களை ஒரே திரையில் அளிப்பதற்கு முன்வந்துள்ளது. தாகம், அழியாத கவிதை, ஏகலைவன், கனவுகள் என்பவையே அவை.

| | | | | |
|---|---|---|---|---|
| லண்டன்: | 30-01-2004 - ரூட்டிங் புறோட்வே | | 31-01-2004 - லேயிற்றன் | 01-02-2004 - வெம்பிளி |
| நெதர்லாந்து: | 06, 07, 08,-02-2004 | ஜேர்மனி: | 13,14,15-02-2004 | |
| டென்மார்க்: | 20,21,22-02-2004 | பிரான்ஸ்: | 27,28,29-02-2004 | |
| சுவிஸ்: | 05, 06, 07-03-2004 | கனடா: | 12, 13, 14 - 03-2004 | |

ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன. தொடர்புகளுக்கு இணையத்தளம் www.eelavarcinearts.comல் தொடர்புகொள்ளலாம். ஆர்வமுள்ள கலைஞர்களையும் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு ஈழவர் திரைக்கலை மன்றம் கேட்டுக்கொள்கிறது. இளைய தலைமுறையினரின் கலை ஆர்வம் மேற்பட இதுபோன்ற மன்றங்கள் செயற்பட வேண்டும்.

(2) **தமிழ் ஓலைகள் - 2004 Tamils Pages:-** பதினொராவது தமிழ் ஓலைகள் வெளியீடு தமிழ் புத்தாண்டு அன்று 14-04-2004 அன்று வெளியிடப்படும். விளம்பரத்தைப் பார்க்கவும்.

(3) **"தெற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை"** நடத்தும் 20ம் ஆண்டு பூர்த்திவிழா நடைபெறும் இடங்கள்:-


29-02-2004 The Archbishop Lanfranc School, Croydon.
06-03-2004 Ashburton High School, Shirley, Croydon.
13-03-2004 Ashcroft Theatre, Fairfield Halls, Croydon.

மூன்று நாட்கள் கொண்டாடப்படும் மேற்படி விழாவுக்கு உரிய விபரங்களைத் தொடர்புகொள்ள:-
தொலைபேசி இல.: 020 8251 8457, 020 8660 7405 அழையுங்கள். - சோதி

ஹறோவில்

# VENUS
## FOOD & WINE
தமிழ்க்கடை





*1, Centerl Pride,*
*Station Road,*
*Harrow HA1 2TW.*
*Tel: 020 8427 1270*

வோல்த்தம்ஸ்ரோவில்

# *Shree Jewellers*
வைரத்தாலிக்கொடிகள், சங்கிலிகள், காப்புகள், தோடுகள்,
மோதிரங்கள், நவரத்தினங்கள், நெக்லஸ்கள், மகரப்பதக்கங்கள்

## ஸ்ரீ ஜுவல்லர்ஸ்
வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்
சாத்திர விதிப்படி, பொருத்தமான நவரத்தினகற்கள் பதித்து
மோதிரம், பென்ரன், தோடு செய்து தரப்படும்.

***110, Hoe Street, Walthomstow,***
***London E17 4QS. Tel: 020 8509 7588***

கவுன்ஸிலோவில்

*13 வருடங்களாக மக்களின் சேவையில் தென்கிழக்கு இலண்டன்*
*மக்களின் அபிமானம் பெற்ற ஸ்தாபனம்*
*இலண்டன் வாழ் தமிழர்களின் இதயங்களில் நீங்காத இடத்தில்*

# Best Foods
## Super Market
**364 - 366, Bath Road,**
**Hounslow, Middlesex TW4 7KT.**
**Tel: 020 8577 6002 Fax: 020 8570 2323**

வோல்த்தம்ஸ்ரோவில்

# *KUMARANS*
## குமரன்ஸ் *TEXTILES*
**136, Hoe Street,**
**Walthamstow,**
**London E17 4QR.**
**Tel: 020 8521 3444**
**020 8530 3033**
**Fax: 020 8521 9444**

குறொய்டனில்

*13 வருடங்களாக மக்களின் சேவையில் தென்கிழக்கு இலண்டன்*
*மக்களின் அபிமானம் பெற்ற ஸ்தாபனம்*
*இலண்டன் வாழ் தமிழர்களின் இதயங்களில் நீங்காத இடத்தில்*

# Best Foods
## Super Market
**259 - 261, London Road,**
**West Croydon, Surrey CRO 2RL.**
**Tel: 020 8684 6269 Fax: 020 8686 4577**

ஈஸ்ட்காமில்

# *LAKSHMIS*
## JEWELLERS & SILK HOUSE
*HOUSE OF FINE JEWELLERS*

**276, HIGH STREET NORTH,**
**EASTHAM E12 6SA.**
**Tel: 020 8470 5600**
**Fax: 020 8470 3448**

வெம்பிளியில்

# ANGLO ASIAN
**LONDON - COLOMBO** **COLOMBO - LONDON**

*Those willing to send parcels from Colombo to London and from London to Colombo by Air or by Sea are requested to contact us for such services at reduced Rates.*

## ANGLO ASIAN MINI MART
***513, High Road, Wembley HA0 2DN***
Tel: 020 8900 2451 Fax: 020 8903 8202 Mob : 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
373, Church Lane, Kingsbury NW9 8JB
Tel: 020 8200 1555 Mob: 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
539, High Road, Wembley HA0 2DN
Tel: 020 8900 0444 Fax: 020 8900 9656
Mob: 07956 425 707 web: www.angloasiongroup.uk

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

# Prime Food & Wine
*News Papers & Magazines - Off Licence - Grocery*
*Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables*

மனங்கவரும் மளிகைச்சாமான்கள்,
மென்பானங்கள், மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி என
எல்லாவற்றிற்கும் குறைந்த விலையில் நிறைந்த
சேவையைப் பெற எம்மை நாடுங்கள்.



**118, Tooting High Street,**
**London SW17 0RR.**
**Tel: 020 8672 3777**

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க!**

## வேகம் + விவேகம் + துணிச்சல் = கிட்டு

"இன்றைய உலகில் தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் எவராலும் நிராகரிக்க முடியாத பெரு வடிவம் எடுத்ததில் கிட்டுவின் பங்கு இன்றியமை யாதது. உலகெங்கும் சிதறிவாழ்ந்த தமிழ் மக்களை ஒருங்கிணைத்து தமிழீழ விடுதலை நோக்கி அவர் களை அணிதிரட்டுவதில் கிட்டு வெற்றிகண்டார். கிட்டுவின் பங்களிப்பே இன்று மக்கள், புலிகள் என்ற வேறுபாட்டை இல்லாதொழித்துள்ளது.

சர்வதேச சமூகம் விடுதலைப் போராட்டங்களையும் பயங்கரவாதத்துடன் இணைத்து தனது பிற்போக் குத் தனமான செயலை நியாயப்படுத்திவிடும் வேளைகளில்கூட உலகெங்கும் பரந்துநிற்கும் தமிழ் மக்கள்வந்த நெருக்கடிக்கு முகங்கொடுத்து தொடர்ந் தும் எழுச்சி கொள்கிறார்கள் என்றால் அது கிட்டு வால், அன்று விதைக்கப்பட்ட விடுதலை குறித்த கருத்துருவாக்கமும் விழிப்புணர்வுமே அடிப்படைக் காரணமாகின்றன. விடுதலைப்புலிகள் கெரில்லா அமைப்பாக இயங்கிய அந்த நாட்களில் சிறியரக ஆயுதங்களைக் கொண்டு பெரும் சாதனைகளை நிலைநாட்டிய ஒப்பற்ற வீரம் அவருடையது."

**– நன்றி: தாயகன் (தினக்குரல்)**

**இயலாமை:–** "1977ம் ஆண்டு தொடக்கம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்று கிராமம் பிரிக்கப்பட்டு (25 வருடங்கள்) கால்நூற் றாண்டு கடந்துவிட்டது. அந்தக் கிராமத்தை ஏதா வது ஒரு தொகுதிக்குள் ஒன்றிணைக்க முடியாமல் அதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க முயல்வதும் முஸ்லிம் களின் இலட்சியக் கனவுகளை மூடிமறைப்பதும் எவ்வளவு போலித்தனமான விடயங்கள்.

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு முன்னர் சம்மாந்துறை தொகுதியில் பாதியாகவும் பொத்து வில் தொகுதியுடன் பாதியாகவும் துண்டாடப்பட் டுள்ள அக்கரைப்பற்று மண்ணை இணைத்தாலே அது பெரும் சாதனைதான். ஆட்சியும் அதிகாரமும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கையில் கிடைத்து இரண்டு மூன்று அரசாங்கங்களும் அமைக்கப்பட்டு நாங்கள்தான் ஆட்சி அமைக்க உதவியவர்கள் என்று மார்தட்டும் முஸ்லிம் காங்கிரஸ் மூலம் நாடாளுமன்றம் சென்ற ஒவ்வொருவரும் நீங்கள் மார்தட்டுவதற்கும் சவால் விடுவதற்கும் பட்டம் பதவிகளோடு வாழ்வதற்கும் உங்களுக்கு வாக்குப் பிச்சை போட்ட சமூகத்தின் இலட்சியக் கனவுகளை யும் நிறைவேறாத ஆசைகளையும் பூர்த்தி செய்யா மல் இருப்பது நல்லதா?"

**– நன்றி: மீரா எஸ் இஸ்ஸடீன் (வீரகேசரி)**

**மாறுபட்ட மதிப்பு:–** "இந்தப் போராட்டத் தில் இரண்டு தீமைகள் உள்ளதென தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணரத் தலைப்பட்டார்கள். தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பது ஒருபுறம். சிங்கள மக்கள் உண்மையை உணர்ந்து இதற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கோருவது மறுபுறம். இந்த நிலையில் கவனமாக நடந்து கொண்டு இரு சமூகத்தவர்களையும் பிரித்துவைத்து சமாதானம் பேசினார்கள். ஜே.வி.பி, சிகலஉறுமய, பூமிபுத்ர கட்சிகளைச் சேர்ந்தோர் இந்தக் கலையில் விற்பன்னர்கள். மேலும் இரு சமூகங்களுக்கிடையில் கலகங்களைத் தூண்டிவிடும் அவர்களது நோக்கம் எளிதாக நிறைவேறியது. விடுதலைப்புலிகளை மௌ னமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு கொழும் பில் வாசஸ்தலங்கள், குளிரூட்டப்பட்ட கார்கள் என்பதற்கு மயங்கும் தமிழ் அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் நோக்கத்தில் உறுதி யாகவுள்ளதும் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற தும் இராணுவ பலத்தைப் போன்றே திடமான அர சியல் கட்டமைப்பைக் கொண்டதுமான விடுத லைப்புலிகள் இயக்கம் மாறுபட்டதொன்றாக இருந்தது." **–நன்றி: தமிழ் கனடிய இணையத்தளத்திலிருந்து**

**வாசகர் கடிதம்:** *தமிழர் தகவல் ஆசிரியர் மற்றும் பதிப்பாசிரியர் மற்றும் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களோடு...*

*"வீரம் மிகுந்த வெங்கிட்டு" ஆசிரியரின் ஆழமான கருத்துக்களுக்கும் ஆணித்தரமான வார்த்தைகளுக்கும் நன்றி சொல்ல வார்த்தையேது? இருப்பினும் ஆரம்பத்தில் விடிவு – முடிவு என்று குறிப்பிட்டிருந்தீர்கள் தவிர்த்து விடிவு – மடிவு என்று குறிப்பிட்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்பது பலருடைய தாழ்மையான கருத்து.*

*அடுத்து தமிழர் தகவல் எழுத்தாளர்களை மட்டுமன்றி சிறந்த கலைஞர்கள் அனைவரையும் ஊக்குவிக்கும் என்பதற்கு அட்டைப்படம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. வளர்ந்து வரும் கலைஞர்களை உயரவைக்கும் தமிழர் தகவலுக்கு நன்றி! கவிதைகள், நகைச்சுவைகள், எங்கள் ஊர், தொலைக்காட்சித் தொல்லைகள், பார்த்திபன் சில நினைவுகள், தேசத்துரோகி, மற்றும் வரலாறு படைக்கும் வை.கோ. அனைத்தும் அருமை. பார்த்திபன் சில நினைவுகள்... முடிவுற்றதும் ஒரு தனித் தொகுப்பாக தமிழர் தகவல் அதை வெளியிடுமா?*

*– எஸ்.கே. மைக்கல் (12-01-2004)*

# TASTE OF EELAM

THE FINE SRI LANKAN & INDIAN RESTAURANT

*"அறுசுவைப் பதார்த்தங்கள் அனைத்தையும் உயர்தரமாய் வழங்கிடும் ஓர் உணவகம்"*

406 - 408 Lewisham High Street
Lewisham, London SE13 6LJ
**Tel: 020 8690 3392 - 6902617**


**EELAM SHOP**

399 Lewisham High Street, Lewisham, London SE13 6NZ
**Tel: 020 8690 6545**

# HOTEL WESTEERN

Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place, Bambalapitiya, Colombo 4, Sri Lanka

Tel: 0094 1 507161, 0094 1 507162, 0094 1 507163, 0094 74 518485
Fax: 0094 74 518481



## நட்புக்காலம்

எதைப் பற்றித்தான் நாம்
பேசிக் கொள்ளவில்லை
காதல் காமம்
குல்சாரி
தெறி
ஈழம்
அகிரா குரசேவா
புல்லாங்குழல்...
காற்றுக்குள் மிதக்கும்
நம்
உரையாடல்களைச்
சேகரிக்க
நாளையேனும்
ஒரு கருவி
கிடைக்குமா?

– கவிஞர் அறிவுமதி

## மாதமிரு திருக்குறள் கற்போம்!

**"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்."** – குறள் 67

*ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யக்கூடிய நன்மை கற்றோரவைகள் முந்தி அமருமாறு அவனைக் கல்வித் தகுதியுடையவனாக்குதல் ஆகும்.*

**"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை**
**யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."**

– குறள் 70

*தன்னைக் கல்வித் தகுதியால் கற்றோரவைகள் முந்தியிருக்கச் செய்த தன் தந்தைக்கு மகன் செய்யக் கூடிய கைமாறான உதவி இவனைப் பெறுதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ! என ஊரார் சொல்லும் சொல்லாகும்.*

## அட்டையின் விளக்கம்:

தமிழகத்தில் உள்ள திருவண்ணாமலை திருக்கோயிலின் தோற்றமே இம்மாத அட்டையில் உள்ளது. முழுமுதல் கடவுளாகிய சிவனை வழிபடும் இக்கோயிலில் நடைபெறும் சிவராத்திரிவிழா மிகவும் உன்னதமானது. திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி என்று சைவப் பெரியோர்கள் கூறுவதுண்டு. அது நம் நம்பிக்கையும்கூட. எதிர்வரும் 18-02-2004 நடைபெறப் போகும் சிவராத்திரி விழா பற்றிய ஒரு நினைவூட்டலுக்காகவே அட்டையில் இக்கோயிலின் தோற்றத்தைத் தந்திருக்கிறோம். இக்கோயிலில் இடம்பெறும் பிரசித்திபெற்ற நிகழ்வு கார்த்திகைத் தீபமாகும். ஒவ்வொரு பௌர்ணமித் தினத்திலும் பத்துலட்சம் மக்கள் கூட்டம் கிரிவலத்துக்காகக் கூடுகின்றார்கள். இது இக்கோயிலின் விசேட சிறப்பு.

## குனிவு

குனிந்த தலை குனிந்தபடியே மூட்டை சுமந்து செல்லும் கழுதையை வேம்பில் இருந்த காக்கைகள் கவனித்து வந்தன.

ஒருநாள் காக்கைகளில் ஒன்று மற்றையதைப் பார்த்து, "இந்தக் கழுதைமேல் உனக்கு இரக்கம் வரவில்லையா? எப்போது பார்த்தாலும் மூட்டை சுமந்து துன்பப்படுகிறதே...!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டது.

"நாம் என்ன செய்ய முடியும். கழுதைதான் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்" என்றது மற்றக் காக்கை.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

இறக்கைகளைக் கோதிக்கொண்டே இரண்டாம் காக்கை சொன்னது:

"குனிந்து கொண்டே இருப்பவன்
சுமந்து கொண்டே இருப்பான்."

[நன்றி: காசி ஆனந்தன் கதைகள்]

## நாராய் நாராய்

– சி. சிவசேகரம்

நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்து
பயன்மிக அறிந்த பனைசெறி நாட்டார்
வழிபல சென்றே பலதிசைப் பரந்தார்.
வருகுவ தெந்நாள் அறிவையோ நாராய்

திரைகடல் ஓடித் தம்முயிர் பேணத்
திரிந்தவர் தமக்கோ எங்கணும் அவலம்
கரியவர் அயலார் எனவசை கேட்போர்
கவலைகள் நீயும் உணர்வையோ நாராய்

அகதியின் வாழ்வின் இழிநிலை தாங்கி
அந்நிய மண்ணில் அண்டிக் கிடந்து
மிகநலி மாந்தர் தம்நகர் மீளும்
வகையென ஒன்றேன் மொழிவையோ நாராய்

பெருங்குளிர் வருமுன் கடல்பல தாண்டிப்
புலம்பெயர் புள்நீ கிளையுடன் மீண்டும்
வருகுவை நின்மண் தவறுதல் இன்றிப்
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நாராய் நினக்கோ யாதும் ஊரே
நாராய் நின்இனம் யாவருங் கேளிர்
பாராய் எங்கள் மனிதரின் நிலையை
நாராய் நமக்கோர் நல்வழி கூறாய்.

[நன்றி: கிழக்கும் மேற்கும்]

# M.K. Sri & Co

**Solicitors & Administrators of Oaths**

**We Specialise in**
**Crime**
**Immigration**
**Matrimonial**
**Conveyancing**
**State Benefits**
**Traffic Offenses**
**Advice &Assistance at Police Station**

**Principal: M.K. Sritharan**

**Assistant Solicitors**
**S. Ravindran**
**S. Sivasanthiran**
**V. Ratnam**

**Trainee Solicitors**
**Avtar Manku**
**Selvi Ravindran**

**Legal Aid Work Undertaken**

**We are Faanchised by the Legal Services Commission**

**Te l: 020 8515 7000 (4 lines)**
**Fax : 020 8515 7030**
**Fax : 020 8515 7031 (For Conveyancing only)**

**2 C, FAIRHOLME ROAD**
**(OFF STATION ROAD)**
**HARROW, MIDDLESEX HA1 2TN**

**DX: 4232 Harrow (1) www.mksri.co.uk**


மாதம் ஒரு தகவல்

தமிழர் தகவலுக்காக தென்கச்சி அவர்களால் வழங்கப்பட்டது.

# முடியின் முடிவு!

- தென்கச்சி சுவாமிநாதன்

"என்ன சார்... வேண்டுதலா... திருப்பதியா... பழனியா..."

"அதெல்லாம் ஒன்றுமில்லீங்க... என்னமோ தெரியலே... தலை முடியெல்லாம் தானாகவே கொட்டிட்டுது"

"அதுக்காகக் கவலைப்படாதீங்க"

"உங்களைப் பார்த்ததும் எனக்கு அந்தக் கவலை போயிடிச்சு"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"உங்க தலை என் தலையைவிட மோசமா இருக்கே!"

"ஹி! என்ன பண்றது. விஞ்ஞான ரீதியா 90 சதவீத வழுக்கை ஆண்களுக்கான மரபு அணுக்களிலேயே தீர்மானம் ஆகிவிடுகிற விஷயம்! அதைத் தடுக்க முடியாது. மீதி 10 சதவீதம்... தோல் வியாதி... அல்லது வேற நோய்கள் காரணமாக ஏற்படலாம். அதைச் சரிபண்ணலாம்."

"செய்தித் தாள்களிலே நிறைய விளம்பரம் வருதே... தலையிலே முடி வளர வைக்கலாம்னு?"

"அதெல்லாம் முடியாத காரியம்ன்னு சொல்லுது அமெரிக்க மருத்துவக் கழகம்"

"அப்படியா?"

"ஆமாம்! American Medical Association அறிக்கை என்ன சொல்லுது தெரியுமா?"

"என்ன சொல்லுது"

"வழுக்கை விழுவதைத் தடுக்கிறேன்... தள்ளிப் போடுறேன்... சரிப்பண்றேன்... இப்படிப்பட்ட அறிவிப்புகள், விளம்பரங்கள் காலம்காலமாக வந்துகிட்டுதான் இருக்கு. ஆனா அந்த விளம்பரங்கள்லே சொல்லப்படுகிற மருந்துகளுக்குள்ளே ஒரே ஒரு விஷயத்திலே ஒற்றுமை உண்டு... அது என்னென்ன... அதுகளாலே முடியை வளர வைக்க முடியாததில் லைங்கறது தான்! அப்படின்னு சொல்லுது!"

"அப்படின்னா... இதுக்கு நான் எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம்னு சொல்றீங்களா?"

"ஆமாம்"

"சார் உங்க தலையிலே சுத்தமா முடி இல்லே... அதனாலே நீங்க சொல்றதை அனுபவக் கருத்தா ஏற்றுக் கொள்ளலாம். இருந்தாலும் இவ்வளவு தூரம் வந்தது வந்துட்டேன்... உள்ளேபோய் டாக்டரையும் நேர்லே சந்திச்சி அவரோட ஆலோசனை என்னங் கறதையும் கேட்டிட்டு வந்துடறேனே!"

"அதுக்கு அவசியமில்லை!"

"ஏன்?"

"நான்தான் அந்த டாக்டர்!"

# SAI WINGS

Residental Sales, Lettings, Mortgages, Personal & Business Loans, Life & Building Insurance

தரமான சேவைக்கும் - விரைவான பெறுபேறுகட்கும் முதன்மை நிறுவனம்.
தமிழ், சிங்களம், ஆங்கிலம் எம்மொழியிலாயினும் பேசவும்,
தொடர்புகொள்ளவும், முடிவு காணவும் இன்றே நாடுங்கள்.

**77, RICHFORD WAY, MITCHAM, SURREY CRO 3AJ, U.K.**

**Tel/Fax: 020 8771 5928 Mob: 07903 525 965**

**Website: www.saiwings.com E-mail: admin@saiwings.com**

**TOOTING TOURS & TRAVELS**
**217, Tooting High Street**

*Contact:* **N. Vivekanandan**
*Independant Financial Advisor*

# LinkAIR

## Travels Limited

5047 ATOL PROTECTED

IATA 91-2 5704 0

SriLankan

Special Fares To :
Colombo
Madras
Singapore
Canada

**We can also arange : COLOMBO - JAFFNA - COLOMBO**

**361 London Road, Croydon, Surrey CR0 3PB**
**Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579**

# சடங்கும் சம்பிரதாயமும்

**************************************************

**- ஜே.பி. பாலசுப்பிரமணியம்**

சடங்கு சம்பிரதாயங்களுக்கு, நம்முடைய சமூகத்தில் மிக அதிக முக்கியத்துவம் அளிக்கின்றோம். அதன் மையக் கருத்தான பக்தி, மனித நேயம், மக்களை நல்வழிப்படுத்துதல் ஆகியவைகளை மறந்து விடுகிறோம். அந்தந்தக் காலகட்டங்களிலே மகான்கள், மகிரிஷிகளால் அந்தந்த சூழ்நிலைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட சில நல்ல வழிமுறைகள் சடங்குகளும், சம்பிரதாயங்களும் சூழ்நிலைகளும், காலங்களும் மாறும்போது நிறையச் சம்பிரதாயங்கள் தேவையில்லாமல் போய்விடுகின்றன. உதாரணமாக, கிராமப்புறங்களில் பச்சை வைத்தல் என்று சம்பிரதாயம் தற்போதும் நடைமுறையில் உள்ளது. ஒருவருக்கு உடல்நலம் சரியில்லை என்றால் பச்சை வைத்தால் உடம்பு குணமாகிவிடும் என்ற நம்பிக்கை.

பச்சை வைப்பது என்பது ஒரு கோழியையோ அல்லது ஆட்டையோ கடவுளுக்குப் பலி கொடுத்து அதனால் தயாரிக்கப்பட்ட உணவை மற்றவர்களுக்கு அளிப்பதாகும். இதிலுள்ள மையக்கருத்து சில நபர்களுக்கு உணவு அளித்தல், அவர்களின் பசியைப் பேரக்குதல் என்பதுதான். மற்றவருடைய பசியைப் போக்கினால் உனக்கு கடவுள் நன்மை அளிப்பார் என்பதுதான்.

சடங்கு - சம்பிரதாயங்கள் நாட்டுக்கு நாடு ஏன் சில நாடுகளில் ஒரு பகுதிக்கு, பகுதி மாறுபடுகிறது. உலகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலே ஆயிரக்கணக்கான சம்பிரதாயங்கள். ஒரு நாட்டிலே நல்லது என்று கருதப்படுகிறது மற்றொரு நாட்டிலே தீமையாகின்றது. ஆகவே சம்பிரதாயம் சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளிக்காதீர்கள். அதன் பின்னே இருக்கிற மனித நேயத்தை நல்ல எண்ணத்தைப் பாருங்கள். கடவுள் அதைத்தான் பார்ப்பார். கடவுளின் பெயரால் நடத்தப்படுகின்ற, மற்றவர்களுக்கு தீங்கு, மனம் புண்படுதல் போன்றவைகளை ஏற்படுத்துகின்ற சடங்கு-சம்பிரதாயங்களைத் தூக்கி எறியுங்கள். அவைகளை மாற்றுவது அல்லது ஒதுக்குவது தெய்வக் குற்றமாகும் என்று நினைப்பது முட்டாள்தனமாகும்.

**ஒரு விதவையின் கண்ணீரைத் துடைக்காத -**
**பசியோடு இருப்பவனுக்கு உணவளிக்காத**
**மதத்தைத் தூக்கியெறியுங்கள்.**

**- விவேகானந்தர்**

விவேகானந்தர் கூறியதைச் சிந்தனை செய்து பாருங்கள். தெய்வத்திற்குப் படைக்கக் கூடாத மாமிசத்தைப் படைத்த கண்ணப்ப நாயனாரின் பக்தியை கடவுள் ஏற்றுக்கொள்ளவில்லையா? சடங்கு-சம்பிரதாயம் செய்கின்ற நபரின் உள்ளத்தையும் அதிலிருக்கும் எண்ணத்தையும்தான் கடவுள் பார்ப்பார். கடவுளின் அறிவு ஆற்றலை மிகமிகக் குறைவாக மதிப்பிடாதீர்கள்.

ஒரு மனிதனின் வெற்றியை அவன் அடைந்துள்ள பணத்தை மட்டுமே அளவு கோலாக வைத்து பார்க்காதீர்கள். ஆயிரம் பணக்காரர்களிலே ஒருவர் தான் நிம்மதியுடன், சந்தோஷத்துடன் வாழ்பவர் என்பதை மறந்துவிடாதீர்கள். பணம் மட்டுமே வாழ்க்கையில்லை. ஓரளவு பணமிருந்தால் அது உங்களைக் காப்பாற்றும். அளவிற்கு அதிகமாகப் பணமிருந்தால் நீங்கள்தான் அந்தப் பணத்தைக் காப்பாற்ற வேண்டும். அதற்கு வேலைக்காரனாக நீங்கள் இருக்க வேண்டும்.

பணத்தால் பெறமுடியாத பணத்தைவிட முக்கியமான ஆரோக்கியம், படிப்பு, குடும்ப அமைதி, நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், வாழ்க்கைக்கு மிக முக்கியமானது என்பதை உணருங்கள். இவைகளை யெல்லாம் எவ்வளவு கோடி பணம் கொடுத்தாலும் வாங்க முடியாது. பணம் உங்களுக்கு அடிமையாக இருக்கவேண்டும். பணத்திற்கு நீங்கள் அடிமையாக்கக்கூடாது. தேவையான அளவிற்கு அதிகமாக வருகின்ற பணம் உங்களுக்கு எப்போதுமே துன்பத்தையும், பிரச்சனைகளையும்தான் கொண்டு வருகின்றது. தவறான வழிகளிலே வருகின்ற பணம் மிக விரைவாக, மிக அதிகமாக துன்பங்களையும், பிரச்சனைகளையும் கொண்டு வரும்.

A என்பவர் ஒரு பெரிய பணக்காரர், நிறைய வியாபார நிறுவனங்களும், தொழிற்சாலைகளும், நிறைய கார்களும், பங்களாக்களும் வைத்திருப்பவர். ஒவ்வொரு நாளும் இரவில் அவருக்குச் சரியான தூக்கமில்லை. இந்த தொழிற்சாலைக்கு வந்துள்ள இறக்குமதி பில்லை பேங்கில் எடுக்க; குறைவாக உள்ள சில லட்ச ரூபாய்களை எப்படிப் புரட்டுவது. அந்த நிறுவனத்திற்கு கட்ட வேண்டிய லோன் தவணையை எப்படிக் கட்டுவது என்பது போன்ற கவலைகள். அதை அடுத்தநாள் சமாளிக்கும் சாமர்த்தியங்கள் என்று ஒவ்வொரு நாளும் இதே கதை தான். எப்போதுமே பணத்திற்குப் பற்றாக்குறை தான். கோடிக்கணக்கில் பணம் புரள்கிறது. ஆனால் எப்போதும் பணம் பற்றாக்குறை நிலைமைதான். ஏனென்றால் பணம் அதிகமாக இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அவர்தான் அடுத்த தொழிற்சாலையை ஆரம்பித்துவிடுகிறாரே.

B என்பவர் மற்றொரு பணக்காரர். சிறிய பணக்காரர். ஒரு வியாபாரத்தை நடத்திக்கொண்டு ஒரு காரும் ஒரு வீடும் ஒரு வியாபாரமும் மட்டுமே உள்ளவர். இவருக்கு பணப்பற்றாக்குறை எப்போதுமே இல்லை. திடீரென்று பத்தாயிரம் செலவு வந்தால் அவரிடம் பதினைந்தாயிரமாக கைவசம் இருக்கும். மற்றொரு நாள் ஒரு லட்சம் தேவைப் பட்டால், யாரோ ஒருவர் ஏற்கனவே கொடுத்த இரண்டு லட்சங்களைத் திருப்பிக் கொண்டுவந்து

கொடுப்பார். ஆக பணப்பற்றாக்குறை என்பது எப்போதுமே அவர் வாழ்க்கையில் இல்லை. இந்த இருவரில் உண்மையான பணக்காரர் யார்?

A என்கின்ற பணக்காரர் பணத்துக்கு அடிமையானவர். பேங்கில் லட்சக்கணக்கில் பணத்தை எண்ணுகின்ற கேஷியரைப் போன்றவர். சொத்துக்களுக்கு சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் நியமிக்கின்ற Care taker போன்றவர். பணம், பணம் என்று அதை அபிவிருத்தி செய்வதிலேயே வாழ்நாள் முழுவதையும் கழிக்கின்ற முட்டாள். இதுதான் மாயை என்று கூறப்படுவது. இவன்தான் மாயை வலையிலே சிக்கிக் கொண்டவன். உலகில் தோன்றிய மகான்கள், மகிரிஷிகள், மக்கள் தலைவர்கள், விஞ்ஞானிகள், சிந்தனையாளர்கள் யாரும் பணக்காரர்கள் அல்ல. குணத்தால், பண்பால் மக்களை நல்வழிப்படுத்துவதால் உயர்ந்தவர்கள். அதனால் அவர்கள் சரித்திரத்திலே இடம் பெற்றார்கள். காலத்தால் அழியாத புகழைப் பெற்று வருகிறார்கள். இறந்து எவ்வளவோ நூற்றாண்டுகள் ஆன பிறகும் அவர்களுடைய பெயர் அவர்கள் வாழ்க்கைச் சரித்திரங்கள் நிலைத்து நிற்கின்றது.

'ஒரு விதவையின் கண்ணீரைத் துடைக்காத, பசியோடு இருப்பவனுக்கு உணவளிக்காத மதத்தைத் தூக்கி எறியுங்கள்' என்று விவேகானந்தர் கூறியதைச் சிந்தித்துப் பாருங்கள்.

நாம் இந்த உலகத்திலே பிறக்கும்போதே திரும்பி இந்த உலகை விட்டுச் செல்லும் ரிட்டர்ன் டிக்கெட்டுடன்தான் வந்துள்ளோம். கண்டிப்பாக ஒரு நாள் திரும்பித்தான் போகப் போகிறோம். அந்த ரிட்டர்ன் டிக்கெட்டில் நாம் திரும்பிச் செல்லும் திகதியும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் என்ன திகதி என்பது நமக்குத் தெரியாது. அது நாளைக்கே இருக்கலாம். அல்லது 5 வருடங்கள் கழித்து இருக்கலாம். நல்ல மரணமாக இருக்கலாம் அல்லது பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையில் கவனிப்பாரற்று, நாதியற்று, கேவலப்பட்டு, ஒவ்வொரு நாளும் சித்திரவதைப்பட்டு மரணமாகலாம். செல்லும்போது நம்முடன் கொண்டு செல்வது எதுவுமில்லை.

'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என்று கூறிய பட்டினத்தாரின் பாடலை நினைத்துப் பாருங்கள். காதறுந்த ஊசி எதற்குமே பயன்படாது. எதற்குமே பயன்படாத பொருளைக் கூட நம்முடன், இறப்பின் பிறகு வரப்போவதில்லை என்று கூறியுள்ளார். ஆனால் ஒன்று மட்டும் நம்முடன் கூட வரும். அதுதான் நாம் செய்த பாவ புண்ணியங்கள். அதன்படி அடுத்த பிறவியை எந்த நாட்டிலே எந்தப் பெற்றோருக்குக் குழந்தையாகப் பிறக்க வேண்டும் என்பதைக் கடவுள் முடிவு செய்வார்.

– நன்றி:– சிந்திப்போம் சிந்திக்கவைப்போம்

வோல்த்தம்ஸ்ரோவில்

PRABAS பிரபாஸ்

தமிழ்க்கடை



156-158, Forest Road, Walthamstow,
London E17 6JQ.
Tel/Fax: 020 8509 3322

## மாணவர் பக்கம்:

# உல்லாசப் பிரயாணம்

– நிஷானி ஜெயபாலன்
(திருவள்ளுவர் தமிழ் பாடசாலை)

**கோ**டைக்கால விடுமுறையைக் கழிப்பதற்காக எமது பாடசாலை மாணவிகள் ஒரு சுற்றுலாவை ஒழுங்கு செய்தார்கள். நானும் இணைந்து கொண்டேன். லண்டனில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த லேக் சயிட் (Lake Side) ஏரியின் காட்சியையும், அங்கு போவதற்கு உயர்ந்த மலைச்சாரலில் (Haverth Waite) காவத் வையிட் புகையிரத நிலையத்தையும் பார்க்கவே பயணத்தை ஆரம்பித்தோம். இந்தப் புகையிரத நிலையத்தில் புகைவண்டியை இழுத்துச் செல்ல நீராவியால் இயக்கப்படும் யந்திரங்கள் (Steam Engine) பயன்படுத்தப்படும். நீராவியை உற்பத்தி செய்ய நிலக்கரி (Coal) பாவிக்கப்படுகின்றன. நிலக்கரியின் நிறம் கறுப்பு. அதனால் ஏற்படும் புகையும் கறுப்பு.

எங்கள் தாய் நாட்டிலும் (Sri Lanka) 1965ம் ஆண்டு ஆங்கிலேயரால் கரிக்கோச்சிகள் ஆரம்பிக்கப் பட்டதாக அறிகிறோம். எங்களைப் போன்ற இளம் சமுதாயங்கள் கரிக்கோச்சியைக் கண்டுகளிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதனால் இளம் சமுதாயம் காவேத் வையிட் புகையிரத நிலையத்துக்கு அடிக்கடி சுற்றுலா வருவது வழக்கமாயிற்று.

நாங்கள் வான் ஒன்றை ஒழுங்குசெய்து பயணத்தை ஆரம்பித்தோம். எங்கள் வான் சாரதி, இந்தப் பாதையில் நல்ல தேர்ச்சி பெற்றவர். போகும் இடங்களை எங்களுக்கு வர்ணித்தபடி வானைச் செலுத்தினார். போகும் பாதையின் இருபக்கமும் மலைகளும் பள்ளத்தாக்குகளும் இருந்தன. இயற்கைக் காட்சிகளை அனுபவிப்பதிலேயே இலயித்து, நேரம் போனதே தெரியவில்லை. சரியாய் சாயந்தரம் ஆறுமணிக்கு ஒழுங்கு செய்த (Fair Ladies Barn Guest House) விடுதியைச் சென்றடைந்தோம். மறுநாள் காலை புகையிரத நிலையத்தை நோக்கி எமது பயணம் ஆரம்பமானது. புகையிரத நிலையம் போய்ச் சேரவும், புகைவண்டி புறப்பட ஆயத்தமாய் மேடையில் நின்றது. நாங்கள் தாமதிக்காது நுழைவுச் சீட்டுக்களைப் பெற்று, புகைவண்டியில் ஏறிப் பயணத்தைத் தொடங்கினோம். புகைவண்டி புறப்பட விசில் அடிக்கப்பட்டது. புகைவண்டி ஒருதடவை முறித்துச் சொடக்கு, விட்டுக்கொண்டு 'குப் குப்' என்று புகைவிட்டபடி (Steam Engine) நீராவி இயந்திரம் இலேசாக நகரத் தொடங்கியது. ஓங்கி வளர்ந்த மரங்கள் ஊடாக, போடப்பட்ட தண்டவாளத்தில் வளைந்து வளைந்து மலைச்சாரலில் புகைவண்டி ஓடியது. புகைவண்டி போவதைப் பார்த்து நாம் பிரமையும், பேரானந்தத்தையும் அனுபவித்தோம். நாங்கள் இறங்குமிடம் அண்மித்தது. புகைவண்டியும் பெரும் மூச்சோடு, புகை கக்கிக்கொண்டு ஏரியின் நுழைவாயிலை வந்து அடைந்தது.

நாங்கள் இறங்கி, அங்கே காத்து நின்ற (Ferry) படகில் ஏறி ஏரியில் பயணத்தைத் தொடங்கினோம். ஏரிக்கரை அழகும் வளமையும் கொழிக்கும் அற்புத இடமாகக் காணப்பட்டது. ஏரியின் மேற்பக்க அலைகள் வீசிய காற்று 'ஜிலு ஜிலு' என்று எங்கள் மேல் பட்டு சில்லென்ற குளுமையான ஓர் உணர்வு உடலெல்லாம் பரவியது. ஏறக்குறைய ஒருமணி நேரத்தின் பின், திரும்பி ஏறிய இடத்தக்கு வந்து சேர்ந்தோம். நாம் அங்கு காத்து நின்ற புகைவண்டியில் பயணம் செய்து றெயில்வே ஸ்ரேசனை வந்தடைந்தோம். அங்கிருந்து எமது வானில் எம் இருப்பிடமான ஈஸ்ட்காம் (Eastham) வந்து சேர்ந்தோம்.

## திருக்குறளுக்கான ஒரு மனனப் போட்டி!



திருக்குறள் ஒரு பொதுமறை, நம் இனத்தின் – மொழியின் பொக்கிசம். இதைப் படித்துணர்வதால் நம்மினத்தில் இன்று அருகிப்போயுள்ள நன்றி உணர்வு மேலோங்க வேண்டும் என்பது "தமிழர் தகவல்"இன் தணியாத ஆசை யாகும். அதற்கான முதல் முயற்சி இது. கீழே தரப்படும் அதிகாரங்கள் பத்தும் மனனம் செய்யப்பட்டு ஒப்புவிக்கப்படல் வேண்டும். அவையாவன: *1.* கடவுள் வாழ்த்து, *6.* வாழ்க்கைத்துணைநலம், *9.* விருந்தோம்பல், *10.* இனியவை கூறல், *11.* செய்நன்றி அறிதல், *14.* ஒழுக்கமுடைமை, *15.* பிறன்இல் விழையாமை, *23.* ஈகை, *30.* வாய்மை, *32.* இன்னா செய்யாமை. இதன் நேரடிப் பரீட்சை உங்களுக்கு வசதியான ஒரு இடத்தில் நடைபெறும். நீங்கள் தயாராக உள்ளபோது "தமிழர் தகவலுடன்" தொடர்பு கொள்ளலாம். வெற்றி பெற்றவர்களுக்கு £100 பவுண்கள் பரிசளிக்கப்படும். வயது எல்லை ஆறு தொடக்கம் இருபது வரை ஆகும். இதேவகையில் ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறள்களும் பாடமாக்கி ஒப்புவிக்கப்படு மாயின் £1000 பவுண்கள் ஒரேமுறையில் பரிசாக வழங்கப்படும். பிரபலமான நிறுவனமொன்று இதற்கான பரிசினை வழங்க முன்வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் கால எல்லை *31-07-2004* ஆகும்.

– ஆசிரியர்

சிவமயம்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!

## ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

**(5, Chapel Road, West Ealing, London W13 9AE. தொலைபேசி: 020 8810 0835)**

# சைவ சித்தாந்தத் தமிழ் வகுப்பு

*(08-03-1998 இலிருந்து நடைபெறுகின்ற இலவச வகுப்பு)*

**வெள்ளம் வருமுன்பே அணை கட்டப்பட வேண்டும். நாம் வந்த பின்னராவது கட்டுவோம்!**

**இடம்:** அருள்மிகு ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோயில்

**காலம்:** பாடசாலை விடுமுறைகள் தவிர்ந்த எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 4.00 மணி தொடக்கம் 5.30 மணிவரை (தொடர்ந்து 15 நிமிடம் வழிபாடு)

**வயது:** நான்கு வயதிற்கு மேற்பட்டவர்கள். தமிழறியாதார்க்குத் தமிழ் கற்பிக்கப்படும்.

**மொழி:** இலகு தமிழ் (தேவைக்கேற்ப ஆங்கிலம் பயன்படுத்தப்படும்.)

**கற்பிப்போர்:** திரு. க. இராஜமனோகரன் (தொலைபேசி 07931 531 305)
திரு. நா. நித்தியானந்தன்
திருமதி. ச. இராஜமனோகரன்

எம்மிலே பலரும் சமய அறிவைத் தேவைப்படாத ஒன்றாகக் கருதலாம். ஏன், விருப்பமில்லாத ஒன்றாகக் கூட எண்ணலாம். ஆனால், அவ்வறிவைப் பிள்ளைகளுக்குச் சரியான முறையிலே கற்பிக்கவேண்டியது பெற்றோராகிய எமது கடமை! எம்மிடமிருந்து சமய அறிவை எதிர்பார்ப்பது அவர்களின் பிறப்புரிமை! சமயத்தைச் சரியா? பிழையா? என்ற முடிவினை எடுப்பதை அவர்களிடம் விட்டுவிடுவோம். அது ஒவ்வொருவரின் ஆன்மீக உரிமை!

மேலும், நாம் எவ்வளவு முயன்றாலும் விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறினாலும் கடவுள் நம்பிக்கை இருந்தே தீரும். எனவே, அதனைக் கற்காது மூடநம்பிக்கைகளை வளர்ப்பதிலும் பார்க்கக் கற்றுத் தெளிவது எச்சமயத்தவர்க்கும் நன்மை தருவதாகும்.

*காலம் இன்னும் கடந்துவிடவில்லை. இப்போதும் இணையலாம்!*

*மிச்சத்தில்*

# கிறேஸ் களஞ்சியம்

# GRACE

ஈழமக்களின் அதிமுக்கிய உணவுகளான அரிசி, அரிசிமா, மீன், றால், நண்டு எல்லாம் மிகவும் மலிவு விற்பனையில்

***36-37, Monarch Parade, London Road, Mitcham CR4 3HA, Surrey.***

**Tel: 020 8648 0319**

*Open 7 a.m - 11 p.m*

# எங்கள் ஊர்

— வத்தியூர் மைக்கல்

வடமாராட்சி கிழக்குப் பகுதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் பழமை வாய்ந்ததுமான பல கிராமங்களில் **"வத்திராயன்"** என்ற எனது குட்டிக் கிராமம் பற்றி எழுதுவதில் சந்தோசமடைகிறேன். உடுத்துறை, மருதங்கேணி கிராமங்களின் மத்தியில் அமைந்திருக்கிறது எங்கள் ஊர். வத்திராயன் என்பதற்கு, வத்தையில் வந்து இறங்கிய அரசன் ஆட்சிசெய்ததால் "வத்தைராஜன்" என்றும், பின்னர் காலப்போக்கில் அது மருவி "வத்திராயன்" என்று அழைக்கப்பட்டதாகவும் மூதாதையர் சொன்னதாகப் பெரியவர்கள் சொல்வார்கள். இருப்பினும் வரலாற்று நூல்களிலோ இல்லை ஆய்வுகளிலோ இதுபற்றி இருப்பதாக நான் அறியவில்லை. இது எந்தளவிற்கு உண்மை என்பது யாரும் அறியாத ஒரு விடயம்.

கடற்கரை ஓரத்திலே அமைந்த எங்கள் கிராமம் தென்னஞ் சோலைகளின் முடிசூடி அழகால் நிரம்பி வழிகின்றது. பனை மரங்களும், குட்டிக் குட்டிக் காடுகளும், குளங்களும், ஆறுகளும், தொடுவாய்களும், புற்றரைகளும், மண்கும்பிகளும் சேர்ந்து இயற்கை வளங்களாய்ப் பச்சைப் பசேல் என்று காட்சிதரும்.

எமது கிராமத்தில் வடக்குப் புறத்தில் வசிக்கும் மக்கள் கடலை நம்பியும் தெற்குப் புறத்தில் வசிக்கும் மக்கள் மழையை நம்பியும் வாழ்கிறார்கள். இருப்பினும் சிறிய சிறிய கைத்தொழில்களிலும் எமது ஊர் மக்கள் கைதேர்ந்தவர்கள். தென்னை ஓலைகளை கிடுகுகள் ஆக்கி விற்பனை செய்வார்கள். பனை ஓலைகளில் அடுக்குப் பெட்டி, தட்டுப்பெட்டி, நீற்றுப் பெட்டி, உறி, மூடல் என்று இன்னும் எத்தனை எத்தனையோ விதவிதமான பொருட்களைச் செய்து உபயோகிப்பார்கள். விற்பனையும் செய்வார்கள். இதுமட்டுமின்றி ஒடியல், புழுக்கொடியல், கருப்பணி, பனாட்டு, தேங்காய் எண்ணெய் என்று சிறு தொழில்களில் அசத்துவார்கள்.

எங்கள் கிராமத்தில் உருக்குத்தொடுவாய், காக்கைத்தொடுவாய் என இரண்டு தொடுவாய்கள் உண்டு. கடல் பொங்கி எழும் மாரிகாலத்தில் பலர் இந்தத் தொடுவாய்களில் இறால் மற்றும் சிறியவகை மீன்களைப் பிடித்து உணவாக்குகிறார்கள். இதுமட்டுமின்றி காக்கைத்தொடுவாய்க்கு என்று ஒரு தனிச் சிறப்பும் உண்டு. ஒவ்வொரு நாளும் மாலை நேரமானதும் பல ஊர்களில் வசிக்கும் சுமார் இலட்சக் கணக்கான காக்கைகள் வந்து ஒன்றுகூடி தொடுவாயில் குளித்து அங்கே உள்ள தென்னஞ்சோலைகளில் தங்கி மறுநாள் அதிகாலை கூடு திரும்பும். இதனாலேயே இது "காக்கைத்தொடுவாய்" ஆயிற்று.

எங்கள் ஊரில் ஓடும் "இரட்டாங்காலி" ஆற்றையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். காரணம் இது எங்கள் ஊர் மக்களுக்கு ஓர் இயற்கை நீச்சல் தடாகம். ஆண்கள், பெண்கள் என்று அனைவரும் குளித்து மகிழ்வார்கள். வத்திராயன் சின்னக் கிராமமாக இருந்தாலும் கோயில்கள், பாடசாலைகள், நூல் நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், கலைமன்றங்கள் என்று அனைத்தையும் குறைவின்றிக் காணலாம். குறிப்பாக - திரு. சி. காந்தரூபன், வைத்தியர் திரு. பாலச்சந்திரன் ஆகிய இருவரும் தமிழ்நாட்டின் பழநி முருகனுக்குச் சென்று அங்கிருந்து சிலை கொண்டுவந்து இங்கே கோயில் கட்டினார்கள். இன்றைக்கு சூரன்போர் நடக்கும் புனித தலமாக விளங்குகிறது இந்த ஸ்ரீமுருகன் ஆலயம். மற்றும் சங்குவாலர் கோயிலில் பாம்புக்கு பூஜை வைப்பது வழக்கம். இங்கே பக்தர்களின் கண்முன்னே நாக பாம்பு வந்து பால் அருந்திச் செல்லும். இதுமட்டுமின்றி கலைநிகழ்ச்சிகளிலும் சரி விளையாட்டுக்களிலும் சரி மிகவும் பெயர்போன ஊர் எங்கள் ஊர். நடிகர் எஸ்.பி. தங்கவேல், நடிகவேள் குணநாயகம் இவர்களைத் தந்த ஊர், வடமாராட்சியில் முதல் முதலில் பெண்களை மட்டுமே நடிக்க வைத்து காத்தவராயன் நாட்டுக்கூத்தை மேடையேற்றிப் பல பாராட்டுக்களைப் பெற்ற பழம்பெரும் நாடக இயக்குனர் எஸ்.வி. தங்கவடிவேலு அவர்களைத் தந்த ஊர், மற்றும் குண்டுமணி, குமாரசாமி, பூபாலு, தனபாலசிங்கம் போன்ற பிரபல்யமான நாடக இயக்குனர்களைத் தந்த ஊர், கருணாகரன், மணிசிவா, வெள்ளை போன்ற கவிஞர்களைத் தந்த ஊர், தாயகப் பத்திரிகைகள் அனைத்திலும் மற்றும் எரிமலையிலும் கருணாகரனின் கவிதைகளை இன்னும் காணலாம். மற்றும் மகேஷ், சந்திரகுமார் போன்ற ஓவியர்களைத் தந்த ஊர், சற்குணேஷ்வரன், உதயஸ்ரீ, அன்புமயில் போன்ற எழுத்தாளர்களை உருவாக்கிய ஊர், தமிழீழ சிறப்புப் பாடகரான திரு. சிட்டுவைத் தந்த பெருமை எங்கள் வத்தியூரையே சேரும். இத்தோடு தமிழீழ புனர்வாழ்வுக்கழக பொறுப்பதிகாரியான திரு. காத்தலிங்கம் றெஜி அவர்களைத் தந்த ஊரும் எங்கள் ஊரே! இவரது சேவை அளப்பரியது. அண்மையில் TTN தொலைக்காட்சி ஊடாக இவர் மக்களோடு தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டது அனைவரும் அறிந்ததே.

வடமாராட்சி கிழக்கில் மாலைநேர இலவசக் கல்வி முறையை திரு. ந. யோகேஸ்வரன், ஆசிரியர் திரு.கி. சாந்தகுமார் இருவரும் உருவாக்கத் துடித்தவர்கள். உயர்தர மாணவர்களான பா. சசிகுமார், கி. சிவகுமார், த. விஜயகுலேந்திரன் இவர்களின் ஊடாக இலவச வகுப்புக்களைத் தொடக்கி வைத்தவர்கள். அதே ஆசிரியர் கி. சாந்தகுமார் தற்போது வடமாராட்சி கல்வி அதிகாரியாக உயர்ந்து சேவை புரிகிறார் என்றால் அது எங்கள் ஊரின் சிறப்பைத் தானே சுட்டிக் காட்டுகிறது. இன்னும் நிறைய ஆசிரியர்களை, பட்டதாரிகளை, கலைஞர்களை உருவாக்கித் தந்தது எங்கள் ஊர்.

விளையாட்டுக்களில் கிளித்தட்டு மற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் பல வெற்றிக் கேடயங்களைக் குவித்திருக்கிறார்கள். எமது ஊர் உதய சூரியன் விளையாட்டுக்கழக வீரர்கள், மற்றும் பல வெற்றிப் பதக்கங்களை வென்ற ஓட்டப்பந்தய வீரர் தில்லையம்பலம் செல்வா அகில இலங்கையிலும் ஓடுவதற்குப் பயிற்சிகள் செய்து மைதானத்திலேயே இறந்த செய்தி ஊரறிந்த உண்மை.

இந்திய இராணுவத்தின் கெடுபிடிகளைக் கண்டு பயப்படாமல் ஒன்றுகூடிக் கொடி பிடித்த ஊர். எங்கள் ஊர் மணல் மண்ணில் புரண்டு, படுத்து, எழுந்தால் துன்பம் பறந்து போகும். எங்கள் ஊர்க் காடுகளில் கனியும் நாவல்ப்பழம், இலந்தைப்பழம், ஈச்சம்பழம், காரைப்பழம் என்றால் இப்போதும் வாயூறும். இத்தோடு எங்கள் தமிழ் ஈழத்தின் தேசிய மலரான கார்த்திகைப் பூக்களுக்கும் இங்கே பஞ்சமில்லை.

இப்படி வரலாறுகளில் எழுந்து நின்ற எங்கள் ஊர் இன்று விழுந்து கிடக்கிறது. இருந்தாலும் மக்கள் இப்போது கட்டி எழுப்பத் தொடங்கி விட்டார்கள். விரைவில் எங்கள் ஊர் பழைய படியும் எழுந்துநிற்கும் என்பதற்கு எந்தவித ஐயமும் இல்லை.

நன்றி!

சுதுமலைக் கவிஞர்
கந்தையா இராஜமனோகரன்
அவர்களின்
மூன்று கவிதை நூல்கள்

1. நாற்று
2. தமிழிசைப் பாடல்கள்
3. வானொலிக் கவிதைகள்

ஒவ்வொன்றும் £5.00 ( அஞ்சல் மூலம் £6.50)
மூன்று நூல்களும்... £12.00 ( அஞ்சல் மூலம் £16.00)

தொடர்பு: 07931 531 305

M Markandan & Co.
Solicitors & Administrators of Oaths

- Immigration / Home Office
- Refugee - Asylum
- House / Flat Purchase or Sale etc.
- Commercial Conveyancing
- Matrimonial
- Licensing
- Student Visa To Canada
- Overseas Work Permit
- Employment Law - No Win No Fee Basis
- Advice & Assistance at Police Station
- Traffic Matters
- Free Training Classes In Computing, Accounts And English For Asylum Seekers

Community Legal Service
Immigration Franchise

M. Markandan LL.B
Tel : 020 8514 8188
Fax : 020 8514 8303
DX 4715 East Ham
Thamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT
Email: mm@markandan-solicitors.co.uk

**ஆன்மீகம்**

# காசியில் கைகொடுக்கும் தமிழர் கோயில்

— டாக்டர் க. கதிர்காமநாதன்

**கா**சியா? இந்தியாவின் வடக்கில் இருக்கிறது. மொழிப்பிரச்சனை, இடப்பிரச்சனை, எம்மை ஏமாற்றும் தலைசுற்றுமாறிகள் - அப்பப்பா! என்று கூறும் அனைவரையும் பூரண திருப்தியடையவைக்க இருக்கவே இருக்கிறது ஒரு கோயில். இதுதான் ஆதிசங்கரரின் கோட்பாடுகளைப் பின்பற்றி காஞ்சிப் பெரியவரால் அமைக்கப் பெற்றுள்ள ஸ்ரீ காமகோடீஸ்வரர் ஆலயம். இவ்வாலயம் காஞ்சியையும் காசியையும் இணைப்பதோடு மட்டுமல்லாமல் எல்லாத் தமிழர்களையும் காசியோடு இறுக்கமாக இணைக்கும் இடமாகும். இக்கோயில் அனுமான் கட்டில் இருக்கிறது.

இங்கும் தமிழன் தலைநிமிர்ந்துதான் நிற்கிறான் என்பது போல் ஐந்து நிலைகொண்ட இராஜ கோபுரம் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. எம்மைய றியாமலே வியந்து கோபுர தரிசனம் கோடி புண்ணியமென நினைத்து இருகை கூப்பி வணங்குகிறோம். உட்செல்லும் போதே ஆதிசங்கரரும் சீடரும் இடது பக்கத்திலும், வலது பக்கத்தில் இராமபட்டாபிஷேகத்தையும் காண்கிறோம். பின்னர் சண்மதங்கள் என்ற அடிப்படையில் பிள்ளையார், விஷ்ணு, முருகன், அம்பிகை, சூரியன், சிவனைக் காண்கிறோம். காமகோடீஸ்வரராகிய சிவன் கருவறையில் இருக்கிறார். இக்கோயிலில் நவக்கிரகங்களோடு வேறு தெய்வங்களுமுள. முக்கியமாக சிவபெருமான் சிவசயனமூர்த்தியாக நஞ்சுண்டு பார்வதி மடியில் அயர்ந்து, சுற்றிவர விஷ்ணு, பிரம்மா, ரிஷிகள், பைரவ மூர்த்திகள் சகிதம் படுத்திருப்பது பார்க்க வேண்டிய காட்சி. ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாறுகளையும் கண்டு களிக்கலாம்.

கோயில் தரிசனம் முடிந்ததும் எம்மை எதிர்கொள்கின்றார் நாராயண ஐயா அவர்கள். "வாங்க வாங்க, எப்படி பிரயாணம்? எல்லாம் சௌகர்யமாக இருந்ததா" என ஆதங்கத்தோடு வினவுகிறார். நானும் இலங்கையில் கொழும்பில் இருந்தேன் எனக் கூறினார். எமக்கு சென்ற களைப்புகள் யாவும் தீர்ந்த பின்னர் எம்மை அழைத்துக்கொண்டு அருகாமையிலிருக்கும் ஸ்ரீ காமகோடி மடத்திற்குச் சென்றார். அங்கு யாத்திரிகர் தங்க இடமுண்டு. செல்லும் மக்கள் தங்கள் உற்றாருக்கு இறுதிக் கிரியைகள் செய்யவும், சிரார்த்தம், சங்கற்பம், பித்ரு தானம் செய்யவும் தங்குவார்கள். சிலர் தங்கி அங்கேயே இறக்க இருக்கின்றார்கள்.

எமது அனுபவத்தைக் கூறினால் இவர்கள் ஆற்றும் சேவை ஓரளவு புரியும். இம்மடத்தில் தான் இச்சிவாசாரியாரும் மனைவியாரோடு இருக்கிறார். வீட்டுக்கு அழைத்துச் சென்று 'காப்பி' தந்து உபசரித்தனர். பின்னர் எவ்வளவு நாட்கள் காசியில், எங்கே தங்கியிருக்கின்றீர்கள் என்றவாறு விசாரித்தனர். நாம் முதலிலே ஹோட்டல் சென்றுவிட்டோம் ஆதலால் பிரச்சனை இருக்கவில்லை. இடவசதி இல்லாதாருக்கு மடத்தில் சரி, ஹோட்டலில் சரி தங்க வசதி ஏற்படுத்திக் கொடுப்பார்.



நாங்கள் நாளைக்கு திரிவேணி செல்லவேண்டும் எனக் கூற, உடனே அவர் பொறுங்கள் ஒரு கடிதம் தருகிறேன் - யாவும் சுமூகமாக முடியும் எனக் கூறி, அகலபாத்தில் உள்ள காமகோடி மடத்திற்கு கடிதம் தந்தார். நாங்கள் சென்ற கார் வண்டிக்காரருக்கு ஹிந்தியைத் தவிர வேறு மொழி தெரியாது. எப்படியோ ஒருவிதமாக அவ்விடத்தை அடைந்தோம். அங்கு கடிதத்தை வாசித்துவிட்டு எமக்குத் துணையாக இன்னுமொரு 'சிவாசாரியாரை கூட்டிக் கொண்டு செல்ல அனுமதித்தனர். இச்சிவாசாரியார் திரிவேணியில் எமக்கு படகு ஒன்றைப் பேரம்பேசி பிடித்து, எம்மோடு திரிவேணி சங்கமத்திற்கு வந்தார். அங்கும் நாம் குளித்து, சங்கற்பங்கள் செய்த பின்னர், எம்மோடு வந்து அன்று முழுவதும் அகலபாத்தையே காட்டினார். ஆனால் அவர் தமிழ்மொழியில் கதைத்து, விசாரித்து கோயில் தரிசனம் செய்தது இன்றும் நினைவாக இருக்கிறது. இதேபோன்று காசி விசுவநாதரைத் தரிசிக்கவும் எமக்கு உதவிபுரிந்தார். எனது மனைவியாரும் நானும் தான் காசி சென்றது. இயந்திரப்படகில் சென்று 'பஞ்சகங்காவில்' சீனிவாச ஐயா அவர்கள் சுலோகம் சொல்லக் குளித்து, பின்னர் பிந்துமாதவரை தரிசித்தது மறக்கமுடியாது.

அன்று ஆவணிச் சதுர்த்திநாள் எமக்கு பிராமண குடும்பத்தாரை அறிமுகப்படுத்தி மதியபோசனத்திற்கு ஒழுங்குபடுத்தினார். 25/= தான் சாப்பாடு ஆனால் அங்கு பெற்ற அனுபவம் அளப்பரியது. எமக்கு முதல் உணவளித்தனர். சாதம், கறிவகைகள், மோர், ரசம் இப்படியாக ஒருபிடி பிடித்தோம். சதுர்த்தி என்றதால் மோதகமும், வடையும் தந்தனர். இதன் பின்னர் அங்கிருந்த பெரியவர், "ஆசீர்வாதம் வாங்கிக்கோ" எனக் கூறினார். உடனே அங்குள்ள இளம் தம்பதிகள் சாஷ்டாங்கமாக இவரை வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றனர். பின்னர் மதிய போசனம் செய்யச் சென்றனர். இந்த அனுபவம்

எம்மைச் சிந்திக்க வைத்தது. காசியில் கூட இப்படி எமது கலாசாரத்தைக் கவனிக்கின்றனர். நாமோ இலங்கையில் கூட இவற்றைக் கடைப்பிடிப்பதில்லை என விசனமுற்றேன். இரவு போசனம் 'மதராஸ்கபே', இதுவும் கோயிலுக்கு அருகாமையில். அருமையான சுடச்சுடத் தோசை, இட்லி, சாம்பார், சம்பல். இத் தோசைக்கும் இட்லிக்குமாவது காசி செல்லலாம் எனத் தோன்றும்!

யாரும் காசி சென்றால் இவர்கள் மூலம் தமிழ் ஐயர்/குருக்கள் ஒழுங்குபடுத்தி வேண்டிய கிரியைகளைச் செய்யலாம். இதேபோன்று கயா சென்றாலும் இவர்கள் மிகவும் உதவிசெய்வர். காசிப்பட்டு வேண்டும் என்றாலும் தமிழில் கதைத்து, பேரம்பேசி வேண்டுவதற்கு உதவி செய்வார்கள். இதுமட்டுமின்றி இக்கோயில் ஆதீனம் வெளிநாட்டிலுள்ள கோயில்களுக்கு மரகதலிங்கமும் செய்து கொடுத்து உதவி இருக்கின்றனர்.

இக்கோயில் அனுமான் கட்டில் இருப்பதால் அங்கு சமீபத்திலுள்ள ஆஞ்சநேயர் கோயிலையும் தரிசிக்கலாம். நாங்கள் சென்ற சமயம் இக்கோயில் ஏழை எளியவர்களுக்கு பிரசாதம் வழங்குவதைக் கண்ணால் கண்டோம். திருவிழாக்கள் நடத்தும் இக்கோயிலில் அதிக கூட்டம் இல்லை. ஆனால் அன்பிற்கும் பண்புக்கும் குறைவில்லை.

இக்கோயிலும், காஞ்சி காமகோடிமட ஆதீனமும் எம்மை ஆதரிக்கும் முறை எழுத்தில் வடிக்க முடியாது. காசி விசுவநாதரின் அருளும் இவர்களின் ஆதரவும் தான் எம்மை மீண்டும் மீண்டும் காசி செல்ல அழைத்துக் கொண்டே இருக்கிறது. இதே அனுபவம் இக்கோயிலிற்குச் செல்பவர் யாவருக்கும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. காசி செல்ல இருக்கும் யாவரும் இக்கோயில் சென்று, தரிசித்து அனுபவித்து அருள்பெறுவோமாக.

*******



யக்சன் பொஸ்கோ

அண்மையில் நடைபெற்ற IBC வானொலி இசை நிகழ்ச்சியில் முதல்தர பாடகராகத் தெரிவுபெற்ற செல்வன். யக்சன் பொஸ்கோவைப் பாராட்டுகிறோம். இவரை அறிமுகப் படுத்திய 'கானக்குயில்' திருமதி. யோகா தில்லைநாதன் அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்.



# KRS Oriental Stores


**Indian - Sri Lankan & Continental Foods**

**Fruit - Veg. & Off Licence**

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், குடிவகைகள், இலங்கை - இந்திய பசுமைமிகு மரக்கறிவகைகள், கடலுணவுப் பொருட்கள் (மீன், இறால், நண்டு, கணவாய், கூழ்மிக்ஸ், மற்றும் பல வகைகள்) அத்துடன் இலங்கை - இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள் CD, AUDIO & VIDEO என்பவற்றை சகாய விலையில் பெற்றுக்கொள்ளவும், மற்றும் பூஜைக்குத் தேவையான அபிஷேகப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

**33, Lee High Street,**
**Lewisham,**
**London SE13 5NS.**
**Tel: 020 8297 9432**





VOICE-DIRECT
HOME ACCOUNT
FROM THE COMFORT OF YOUR HOME
WHEREVER YOU ARE...
0800 519 4 519
OR 0207 177 22 00
www.voice-direct.com
SRI LANKA 13p
INDIA 10p
EUROPE 2p
20% FREE TALKTIME
ANOTHER PRODUCT OF
Voice Telecom
your link to the world

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

# 'பார்த்திபன்' – சில நினைவுகள்!

*– அரவிந்தன்*

இந்திய இராணுவம் இலங்கையின் வட கிழக்கை ஆக்கிரமித்து நின்ற காலகட்டமது. மக்களின் மன நிலைகூட இந்திய இராணுவத்தையும் அதன் அத்து மீறிய உணர்வுகளையும் புரிந்து விளங்கிக் கொள் ளாத நிலை. போராளிகளின் மனதுக்குள்ளே போராட்டமாக இந்நிலை தொடர்ந்தது. அவர்கள் வாக்களித்தன்படி தமிழ் மக்களுக்கு சிங்கள அரசி டமிருந்து எதையும் பெற்றுக் கொடுக்க முன்நிற்க வில்லை. பதிலாக அடக்குவதற்கும், ஒடுக்குவதற்கும், ஜே.ஆர். அரசுடன் நல்லெண்ணத்தை ஏற்படுத்த வும்தான் முன்நின்றார்கள். அன்றைய இந்திய உயர் ஸ்தானிகர் டிக்ஸிக் என்பவர் வட கிழக்கின் 'வைஸ்ராய்' போன்று சர்வாதிகாரியாய் தமிழர் களின் மன்னர்தான் தானென எண்ணிக்கொண்டு செயற்பட்டார். இவராலேயே இப்பிரச்சனை மிக வும் மோசமான நிலைக்குப் போனது என்பதைப் பின்னால் இந்திய புத்திஜீவிகளே ஒப்புக்கொண்டி ருக்கிறார்கள். இவரால்தான் எமது ஒப்பற்ற பன்னி ரண்டு திறமைமிகு போராளிகளை இழந்திருந்தோம். அதன்பின்பும் கூட அவர் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ளவில்லை.

இந்திய இராணுவத்துக்கும் போராளிகட்கும் இடையே சூழ்நிலைகளின் இறுகல்கள் முளைவிட ஆரம்பித்தன. ஆயுதங்களை பலவந்தமாகக் களைந் துவிட்டு அப்படியே முத்திவாகினிக்குச் செய்த கைங் கரியத்தை இங்கும் செய்யலாமென அவர்கள் மூளை வேலை செய்தது. இதற்குத் தூபமிட்டவர்கள் நமது தலைவர்கள் என்று அன்று இருந்த சில அடிவருடி கள்தான். போராட்டத்தின் பெறுபேறுகளை தாங் கள் அனுபவித்துவிடலாமென்ற எண்ணம் அன்று இருந்தது போல்தான் இன்றும் இருக்கிறது என்ப தற்குத் தற்போதும் சில அரசியல்வாதிகள் உதாரண மாக உள்ளார்கள். ஆனால் அன்று இந்திய இராணு வத்துக்கு எதிராக மக்களைத் திரட்டவேண்டிய கட்டாயமொன்று ஏற்பட்டபோது, விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவாகவும் மக்களின் எழுச் சியைப் பிரதிபலிப்பவராகவும் திகழ்ந்தவர் 'தமிழீழ மக்கள் கழகத்தின்' தலைவர் திரு. சிவானந்தசுந்தரம் அவர்கள். அப்பழுக்கற்ற மனிதர் இவர். 'கோடீசு வரன் மொழி வழக்கு' என்ற சிங்களத்துக்கு எதிரான சட்ட நடவடிக்கையின் முன்னோடியாகவும், மொழி வழி தொழிற்சங்கங்களின் தந்தையாகவும் அழைக்கப் பட்டவர். டிக்ஸிக்குடன் நேரடியான மோதலில் ஈடுபட்டதன் காரணமாகப் பின்னால் இந்திய – ஈ.பி.ஆர்.எல்.எவ். கூட்டு இராணுவச் சதியால் வல்லைவெளியில் மக்கள் முன் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டவர். இவரே ராஜீவ்- ஜே.ஆர். ஒப்பந் தத்தில் வடகிழக்கின் இடைக்கால நிர்வாக முதல்வ ராகத் தமிழீழ விடுதலைப் புலிகளால் விதந்துரைக் கப்பட்டவர். தமிழர் சுயாட்சிக் கழகத்தை உருவாக்க திரு. நவரத்தினம் அவர்களுடன் ஒன்றிணைந்து நின்றவர். பார்த்திபனுடன் இவருக்குள்ள உறவு இலட்சிய வேட்கை கொண்டது.

*1987*ன் பிற்பகுதி. சொன்னவற்றை எல்லாம் காற் றில் பறக்கவிட்டு எங்கள் சுதந்திர தாகத்தை நசுக்கி விட முயன்றது ஜே.ஆர். நிர்வாகமும் இந்திய ஏதேச் சாதிகாரமும் இணைந்து. உடனடியான மோதலைத் தவிர்த்து சமாதானத்தின் பாதையைத் தேர்ந்தெ டுத்த விடுதலைப் புலிகளின் தலைமை ஒரு ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து – அதையாவது தற்காலிகமாக எங்கள் மக்களுக்கு ஆறுதல் தாருங் கள் என்று கேட்டது. அதுவும் நிறைவேறாத நிலை யில் அரசியல் தலைமை ஏற்றிருந்த பார்த்திபன் அகிம்சைப் போராட்டம் மூலம் அதைப் பெற முயன்றான். தன்னைத்தானே வருத்திக்கொண்டு – தண்ணீர் கூட அருந்தாது சாகும்வரை போராடத் தீர்மானித்தான். ஏற்கனவே உடல்பலமற்ற இவ னைப் பற்றிய வேதனை பலரது உள்ளங்களில் உண்டாயிற்று. எத்தனையோ பேர் இவனைத் தவிர்க் குமாறு தலைமையிடம் சென்று இரந்து கேட் டார்கள். அத்தனையையும் நிராகரித்த பார்த்திபன் தானே அதைச் செய்ய வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான். தானே அரசியல் பொறுப்பாளன் என் பதாலும், தன்னைத் தவிர்த்துவிட்டால் தலைவர் தான் அதனைச் செய்யவேண்டி வரும் என்ற நல்லு ணர்வினாலும் அவன் எதற்கும் இள்கிப்போக வில்லை. ஈற்றில் ஈழமக்களின் பிரதிநிதியாக திரு. சிவானந்தசுந்தரம் (தலைமையின் அனுமதியுடன்) இவனுடன் மூன்றுமணி நேரம் போராடினார். அதற்கும் பார்த்திபன் விட்டுக்கொடுக்கவில்லை. தன் பிடிவாதத்தில் இருந்து ஒரு துளிதானும் இறங் கிப் போகவில்லை. அவனுடன் நடத்திய உரையா டலின் பின் வெளியே வரும்போது திரு. சிவானந்த சுந்தரம் இப்படிச் சொன்னார்; "அவனது தியா கத்தை என்னால் கொச்சைப்படுத்த முடியாது. அவனது நிலைப்பாட்டின் தன்மையில் நான் தோற்றுவிட்டேன்" என்றார் கலங்கிய கண்களுடன். வெளியே கூடிநின்ற எமக்கு இது பேரிடியாக இருந்தது. ஏனென்றால் 'டிக்ஸிக்' என்ற நேர்மை யற்ற – கருணையற்ற இந்தியத் தூதுவரின் எண்ண மும் அவரால் வழிநடத்தப்படும் ராஜீவின் அரசியல் கத்துக்குட்டித்தனமும் எங்கட்குப் புரிந்திருந்தது. ஏதோ இனந்தெரியாத பரிதவிப்பு பலரிடம் ஏற் பட்டது. எப்படி இதற்கு ஓர் தீர்வு காண்பது?

*1987* செப்டெம்பர் 14ந் திகதி தன் பிடிவாதத்தின் உச்சக்கட்டமான உண்ணாவிரதத்தை ஆரம்பித் தான் பார்த்திபன். நல்லூர் ஆலய முன்றலில் மக்கள் வெள்ளம் கண்ணீருடன் திரண்டு இருந்தது. மேடை

யில் அவன் உட்கார்ந்திருக்கிறான். சிரித்த முகத்துடன் திட மனதுடன் அவன் தைரியமாக இருந்தான். அந்த ஒற்றைநாடி உடம்பு ஒரு உன்னதமான நிலைப்பாட்டை நோக்கி நின்றது. யாழ் மண்ணில் எங்கும் பரபரப்பு. மக்கள் அங்கும் இங்குமாக அவலப்பட்டு ஓடிக்கொண்டிருந்தார்கள். என்ன நடக்குமோ? எது நடக்குமோ என்ற அங்கலாய்ப்பு அனைவரிடமும் காணப்பட்டது. ஆனால் அவனோ சிரித்தபடி தன் செயற்பாட்டைத் தொடர்ந்தான். பலர்கூடி ஆராய்ந்தார்கள். இந்தியத் தூதுவருடன் தொடர்பு கொண்டார்கள். அனுதாபமாக எதுவும் இல்லை. வருவதாகச் சொன்னவர்கள் வரவுமில்லை.

அன்று பார்த்திபனின் இரண்டு நாட்கள் உண்ணா விரதம் பூர்த்தியானநேரம். யாழ் மண்ணின் பிரபல சட்டத்தரணியும், பிரசித்திபெற்ற சிங்கள மொழிச்சட்டத்திற்கு எதிரான கோடீசுவரன் மொழி வழக்கின் காரணகர்த்தாவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகராக சென்னை - பங்களூர் சென்றவருமான திரு. செல்லையா கோடீசுவரன் அவர்களைச் சந்திக்கிறேன். மேற்கொண்டு ஏதாவது செய்யமுடியாதா எனக் கலக்கத்துடன் கேட்கிறேன். திரு. சிவானந்தசுந்தரம் அவர்களுடனும் கலந்தாலோசனை நடக்கிறது. அதன்பின் டிக்ஸித்துடன் கதைப்பதற்கு திரு. கோடீசுவரன் ஒப்புக்கொள்கிறார். அதற்கு முன் நமது தேசியத் தலைவருடன் கதைக்கவேண்டும் எனவும், அவரது அங்கீகாரம் பெறப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்படுகின்றது. அதன்படி அன்று பிற்பகல் திருநெல்வேலியில் உள்ள குமாரசாமி ஒழுங்கையில் உள்ள முதலாம் சிறு வழியொன்றில் வீடொன்றில் வைத்து தமிழீழத்தின் தேசியத் தலைவரைச் சந்திக்கின்றோம். கிட்டத்தட்ட ஒருமணிநேரம் திரு. கோடீசுவரன் தலைவருடன் இதுபற்றிப் பேசுகிறார். நிலைமை எங்களுக்கும் புரிகின்றது. ஆயினும் மிகவும் இரக்க சிந்தையுடன் தலைவர் இப்பிரச்சினையில் மிக இளகிய நோக்குடன் ஆறுதல் தருகிறார். ஐந்து அம்சக் கோரிக்கையை நிறைவேற்றுவதாக எழுத்தில் வாக்குறுதி தரப்படின் **திலீபனை** உண்ணாவிரதத்திலிருந்து நிறுத்துவதற்கு தான் பொறுப்பேற்பதாக உறுதிதருகின்றார். அப்போது அவர் 'டிக்ஸிக்' என்ன செய்வார் என்பதையும் தெளிவாக விளக்குகின்றார். அப்புறம் வாசல் வரை வந்து வழியனுப்பிய தலைவரின் வார்த்தைகள் இப்படி வந்தன. "எனக்குப் பிடித்த மலரை என் இறைவனுக்குச் சமர்ப்பித்துவிட்டேன்" என்பதுதான் அது. எங்கள் உள்ளத்தில் எதிர் காலத்தின் 'பயங்கரம்' நிதர்சனமாகத் தெரிகின்றது.

கலங்கிய கண்களுடனும், கனத்த இதயத்துடனும் பலாலியை நோக்கிய எம் பயணம் தொடர்கின்றது.

*(மீண்டும் வளரும்)*


புதிய பொலிவுடன்

லூசியத்தில்

# கற்பகம்
# Katpakam

**36 Loampit Hill, Lewisham,**
**London SE13 7SW.**

Tel/Fax: 020 8694 8810

ஞாயிறு தோறும் உடன் பங்கு ஆட்டிறைச்சி

சகலவிதமான மரக்கறி வகைகள் பழவகைகள் உட்பட சகல தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்.



## தமிழ் ஓலைகள் 2004 Tamil Pages

தமிழ் உலகத்திற்குத் தனித்துவம் வாய்ந்த தகவல் ஏட்டினை 1994ம் ஆண்டு முதல் அளித்துவரும் தமிழ் ஓலைகள் நிறுவனம் தமது

BRITISH tamil DIRECTORIES **11** வது

**தமிழ் ஓலைகள் 2004**ஐ வழமைபோல் தமிழ் புத்தாண்டு 14-04-2004ல் வெளியிடுகிறார்கள். தங்கள் விபரங்கள், விளம்பரங்களை இணைக்க விரும்புவோர் தயவுசெய்து 31-01-2004க்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.

**52, Kingsley Road, Wimbledon,**
**London SW19 8HF.**

**Tel: 020 8543 2126, 020 8942 8745 Fax: 020 8540 3442**
**E-mail: editor@tamilpages.org Web: www.tamilpages.org**

அதிக பிரதிகளை வெளியிட்டு ஐரோப்பாவின் தமிழ் பிரசுரங்களில் நுகர்வோர் தொகையிலும் பிரசுர எண்ணிக்கையிலும் தொடர்ந்து முதல் இடம்பெற்று வருகிறார்கள்.

# தாயகத்தில் விளையாட்டுக்களுக்கான ஒரு கல்லூரி
## Sports Academy for North East (SANE)

*(தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் - ஐக்கிய இராச்சியம் தனது 2003க்கான ஆண்டறிக்கையில் பல நல்ல முயற்சிகளை முன்னெடுத்திருக்கிறது. தாயகத்தில் Sports Academy ஒன்று ஏற்படுத்துவதற்கான திட்டம் செயற் படுத்தப்பட உள்ளது என்பதைத் தெளிவாக்கி அதன் செயலாளர் திரு. நாக. சிறீகெங்காதரன் அவர்கள் இவ்வ றிக்கையில் தெரிவித்துள்ளார். மீண்டும் இச்சங்கத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. சிறீ கெங் காதரனுக்கு 'தமிழர் தகவல்' தன் வாழ்த்துக்களைத் தெரி வித்துக்கொள்கிறது. - ஆசிரியர்)*

**நா**ம் பிறந்த மண்ணில் தொடருகின்ற அமைதி, எமது நீண்டகாலக் கனவு ஒன்றினைச் செயற்படுத் தும் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் செயற்படுத்து வதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கும் வாய்ப் பினைத் தந்துள்ளது. எமது அமைப்புத் தொடங்கிய காலம் முதல் இந்த அமைப்பினை நிறுவியவர்களும் தொடர்ந்து செயற்பட்டவர்களும் நாம் பிறந்த தமிழ் மண்ணில் விளையாட்டுக்களுக்கான ஒரு பொது வானதும் நீண்டகால வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டதுமான ஒரு திட்டத்தைச் செயற்படுத்தும் எண்ணத்தைக் கொண்டிருந்தனர். குறிப்பாக இங் கும், இங்கு வருவதற்கு முன்பும் விளையாட்டு வீரர் களாகவும் விளையாட்டு அமைப்பின் நிர்வாகிகளா கவும் செயற்பட்ட சிலர் இப்படியான ஒரு திட் டத்தைத் தங்களினது இலட்சியமாகவும் கொண்டி ருக்கின்றனர். இதன் விளைவே இன்று நிதர்சனத் திற்குக் காத்திருக்கும் இந்தத் திட்டமாகும்.

நீண்டபோரின் பின்பு 2001ம் ஆண்டு எமது மண் ணில் ஏற்பட்ட அமைதி அங்கு தொடர்ந்தும் வசித்து வருகின்றவரும், விளையாட்டுத் துறையின் அதிகாரி யாகக் கடமையாற்றுபவருமான திரு. றொகான் இராஜசிங்கம் அவர்களை இப்படியானதொரு திட் டத்தைப் பற்றிச் சிந்திக்க வைத்தது. இவருடன் யாழ் மத்திய கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீரரும் தற்போது அமெரிக்காவில் வசித்துவருபவருமான திரு. எதிர்வீரசிங்கமும் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தயாரித்து இலங்கை அரசின் விளையாட்டு அமைச் சின் உதவியை நாடினார்கள். முதலில் யாழ்ப்பாணத் தில் அமைப்பதற்குப் பச்சைக்கொடி காட்டப்பட் டது. தேவையான ஆயத்தங்களைச் செய்யுமாறு அமைச்சு இவர்களைக் கேட்டுக்கொண்டது. இவர் கள் வேண்டிய ஆயத்தங்களைச் செய்ததன் பின் அமைச்சு கைவிரித்துவிட்டது.

இதன் பின்பாக இவர்கள் தமிழ் மண்ணின் மக்கள் திட்டமாகவே இதனைச் செயற்படுத்த முனைந்தார்கள். வன்னியில் செயற்படுகின்ற விளை யாட்டுத் துறையினருடன் தொடர்புகொண்டு அவர் களின் ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற்றனர். இதன் விளைவாகவே இங்கு வருகைதந்த வலைப்பந் தாட்ட வீராங்கனைகள் குழுவினரின் மனேஜராக திரு. றொகான் இராஜசிங்கம் இங்கு வந்திருந்தார்.

இங்கே வந்த இவர் என்னைத் தொடர்புகொண் டதன் பின் திரு. இன்பனுடன் சேர்ந்து விபரமாகப் பேசினார்கள். இதன்பின் அவர்களை நானும் திரு. மயில்வாகனம் அவர்களும் திரு. திருக்கேதீஸ் வரன் அவர்களும் சந்தித்து விரிவாகக் கலந்துரை யாடினோம். நாங்கள் மூவரும் பின்னர் எமது சங்கத்தினரைத் தனித்தனியாகவும் கூட்டாகவும் சந்தித்து விளக்கியதன் விளைவாக இந்தத் திட் டத்தைப் பற்றி அறியவும் தீர்மானிக்கவும் ஒரு சிறப்பு நிர்வாக சபைக்கூட்டத்தையும் அதனைத்தொடர்ந்து ஒரு சிறப்பு பொதுச்சபைக் கூட்டத்தையும் கூட்டி மேற்படி திட்டத்தில் நாமும் பங்குகொள்வதாகத் தீர்மானித்தோம்.

இதன் விளைவாக நவம்பர் மாதம் இந்தத் திட் டத்தை நாங்கள் ஒரு இரவு விருந்து ஒன்றினை ஏற்பாடு செய்து அறிமுகம் (Launch) செய்தோம். இதற்கான பணத்தினைச் சேகரிக்கும் முயற்சியாக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான தீர்மானம் ஒன்றும் இன்று உங்களின் ஆலோசனைக் காகச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

எமது மண்ணில் கிளிநொச்சியில் இந்தக் கல்லூ ரியை அமைப்பதற்காக ஆயத்தங்கள் செய்யப்படு கின்றன. எமது வேண்டுகோளினை ஏற்று தமிழ் மண்ணின் சகல மாவட்டங்களையும் பிரதிநிதித் துவப் படுத்தக் கூடியவண்ணம் ஒரு அமைப்பு அங்கு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பிற்கு விளை யாட்டு உத்தியோகஸ்தர்களான திருவாளர்கள் மரியதாஸ், கிருபாகரன் ஆகியோர் முறையே தலை வர், செயலாளர் ஆகக் கடமையாற்றுகின்றார்கள்.

இந்தத் திட்டத்திற்காக முதலில் பார்த்த இடம் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் ஒரு ஸ்ரேடியம் அமைப்பதற்கு பாவிக்க உள்ளமை யால் தற்போது ஒரு சிறிய கட்டடம் உள்ள 26 ஏக்கர் காணி வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படு கின்றன. முழுமையான திட்டத்திற்கான படம் வரை தல், செலவு எவ்வளவு என்று கணக்கிடுதல் போன்ற வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. இந்த மாத இறுதியில் அடுத்த மாத ஆரம்பத்திலும் எம் மவர் சிலர் அங்கு செல்ல உள்ளனர். அப்பொழுது இந்தத் திட்டத் தயாரிப்புகள் முழுமையாக்கப்படும் என நம்புகின்றோம்.

நாமும் பங்குகொள்ளும் திட்டமான இந்த SPORTS ACADEMY FOR NORTH EAST (SANE ) விளையாட்டுக் கல்லூரி பயிற்சியாளர்களை உருவாக்குவது, கல்லூரிகளின் விளையாட்டு ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சியை வழங்குவது, விளையாட்டில் தகுதி பெற்ற புதிய ஆசிரியர்களை உருவாக்குவது, சிறந்த விளையாட்டு வீரர்களை இளம் வயதிலேயே இனங்கண்டு பயிற்றுவிப்பது போன்ற பல செயற்திட்டங்களைக் கொண்டிருக்கும். இந்த அமைப்பு எமது மண்ணில் அமைந்தாலும் நாமும் அந்தக் கல்லூரியை நடாத்துபவர்களும் ஒரு நல்ல புரிந்துணர்வுடன் வேலை செய்தால் அதனை ஒரு சிறந்த, எதிர்கால விளையாட்டு வீரர்களை உருவாக்கும் அமைப்பாக மாற்றலாம் எனத்திடமாக நம்புகின்றேன். இதற்கு உதவக்கூடிய பலர் எம்மத்தியிலே உள்ளனர். இங்குவந்துள்ள எல்லோரும் இந்தக் கனவை நனவாக்க உதவவேண்டும்.

நன்றி:- *Annual Report 2003*
*தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம், ஐக்கிய இராச்சியம் (18-01-2004)*

எமது அன்பான வாசகர்களிடமிருந்து அவர்கள் படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம். அவை கவிதை, கட்டுரை, அரசியல் ஆக்கம், வரலாறு, பொருளாதாரம், சமயம், கலைகள், ஆய்வுகள், தகவல்கள்.... இப்படி எல்லாமே தேவை. உங்கள் படைப்புக்கள் மூலம் எம்மை ஊக்கப்படுத்துங்கள். - ஆசிரியர்

லண்டனில் அதிக வாசகர்களைக் கொண்ட
ஒரு தமிழ்ச் சஞ்சிகை **தமிழர் தகவல்**.
தமிழர் தகவலில் விளம்பரம் செய்து பயனடைவீர்.






# இந்தியாவும் ஈழத்தமிழர்களும்

– "பொன்லட்சுமி"

இந்தியாவுக்கும் ஈழத்தமிழருக்கும் இடையிலான தொடர்புகள் பல உண்டு. கலை, கலாசாரம், சமயம், வியாபாரம், பாரம்பரிய பண்பாடு, பழக்கவழக்கங்கள் எனக் கூறிக்கொண்டே போகலாம். சிதம்பரம் கோயிலுக்காக தமது சொத்துக்களை உறுதி முடித்துக் கொடுத்திருந்தனர் எமது மூதாதையர் (காணிப் பதிவுகள் இதைச் சான்று பகர்கின்றன), அதேபோல் ஈழத்தில் பிறந்த பெரியார் ஆறுமுக நாவலர் தமிழ் அச்சுக்கூடத்தையும், பள்ளிக்கூடத்தையும் தமிழகத்தில் நிறுவியுள்ளதும் சில உதாரணங்கள்.

எமது முன்னோர்கள் இந்தியாவில் உள்ள திருத்தலங்கட்குத் தமது நேர்த்திக் கடனை நிறைவு செய்யச் சென்றதும், சென்றவர்களில் பலர் அங்கேயே தங்கிவிட்டதும், சிலர் அங்கேயே காலமாகியதும் பற்றிய பல கதைகள் உண்டு.

ஈழத் தமிழர்களின் வீடுகளிலும், கடைகளிலும், பொது மண்டபங்களிலும் அநேகமாக விவேகானந்தர், பாரதியார், வள்ளுவர், காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ், இந்திராகாந்தி, பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர், கருணாநிதி போன்றவர்களின் படங்களே அலங்கரிக்கும்.

கோயில்களிலோ, பாடசாலைகளிலோ, மற்றும் கலை, இலக்கிய, தமிழ் மன்றங்களிலோ எல்லா இடங்களிலும் நடைபெறும் எந்த விழாவானாலும் அங்கு தமிழகத்தைச் சேர்ந்த ஒரு கலைஞரோ, ஒரு பேச்சாளரோ இன்றி அவை சிறப்புப் பெற்றதில்லை. அநேகமாக குழுவினராகவே பங்குபற்றியுள்ளனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெறும் கிறிக்கற் போட்டியில் கூட இந்தியா தான் வெல்லவேண்டும் என எண்ணியவர்கள் ஈழத்தமிழர்கள்.

இந்திராகாந்தி, அண்ணா, எம்.ஜி.ஆர். போன்றோரின் மறைவின் போது துக்கம் அனுஷ்டித்து, சோக நிலையில் துயரப்பட்டவர்கள் வட, கிழக்கு, மலையக தமிழர்கள் தான் சிங்களவர்கள் அல்ல.

தமிழகத்தில் இருந்துவந்த தமிழர்கள்தான் காடும் மேடும், கல்லும் முள்ளுமாக இருந்த குளிர்ப் பிரதேசமான மலையகத்தைச் செப்பனிட்டுப் பெரும் அந்நியச் செலவாணியை சிறீலங்கா அரசுக்கு ஈட்டிக் கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 200 வருடகாலத்தில் அவர்கள் கண்டது எதுவும் இல்லை. இலங்கையில் மிகக் குறைந்த கூலி பெறும் வறிய மக்களாகவும், வீடு, சுகாதார, கல்வி, வேலைவாய்ப்பு, சமூகக் கட்டமைப்பு எல்லாவற்றிலும் மிகப் பின் தங்கியவர்களாகவும் வாழ்க்கையை ஓட்டிவருகிறார்கள். இது அவர்கள் தவறு அல்ல. அன்றைய ஆங்கிலேய அரசும் அதன் ஆதரவோடு நடைபெற்ற கம்பனி நிர்வாகமும்தான். சுதந்திரத்தின் பின் அதே அதிகாரம் சிங்களவரிடம் மாறியபோது நிலைமை மோசமடைந்தது. தேயிலைத் தோட்டங்களை ஊடுருவி சிங்கள மக்களை குடியேற்றி அவர்கட்கு எல்லா வசதிகளும் தரப்பட்டுள்ளது. தமிழர்கள் அதேநிலையில் விடப்பட்டதும் அல்லாமல் தொழில் ரீதியாக பல சலுகைகள் பறிக்கப்பட்டு நாளாந்தக் கூலியாட்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தென்பகுதியில் இவர்கட்குக் கொடுக்கப்பட்ட பெயர் "கள்ளத்தோணி". உண்மையில் இவர்கள் ஆங்கிலேயத் தரகர்களால் தமிழகத்தில் இருந்து ஆசைவார்த்தைகூறிக் கப்பல் மூலம் கூட்டிவரப்பட்டு மன்னாரில் இருந்து கால்நடையாக மலையகத்திற்குக் கூட்டிச் செல்லப்பட்டவர்கள். அப்படிப் போகும் பாதையில் நோயினால் பலர் மரணமடைந்துள்ளனர்.

இதையெல்லாம் கூறவேண்டிய காரணம் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடமுன் நேர்மையான ஆய்வாளர்களை இலங்கைக்கு அனுப்பி மக்களின் நிலையையும், அவர்கள் படும் துன்பத்தையும், எண்ணத்தையும் அறியாமல் டிக்சித் போன்றவர்களை அனுப்பி ஜே.ஆரின் எண்ணத்திற்குச் செயல்பட்டதும், ஒரு பக்கசார்பான தீர்மானமுமே மேலும் தமிழர் தரப்புப் பிரச்சினை சிக்கலாகியது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பிரச்சினைகளின்போது இலங்கை அரசு, பாகிஸ்தானுக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தைப் பாவனைக்குக் கொடுத்திருந்ததை இந்தியா அறியாமல் இருந்திருக்க முடியாது.

இந்திய இராணுவம் இலங்கை வந்தபோது அவர்கள் சிங்கள இனவாத பொலிஸ், இராணுவ படைகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றப் போகிறார்கள் என்ற எண்ணத்தோடு தமிழர்கள் நிறைகுடம் வைத்து மங்கல விளக்கேற்றி வரவேற்றார்கள். ஆனால் நடந்தது எல்லாம் எதிர்மாறாக.

தென்பகுதிச் சிங்களவர்கள் இந்தியாவை ஒரு எதிரியாகவே எண்ணிவந்தார்கள். அவர்களது வீடுகளிலோ பொது இடங்களிலோ ஒரு இந்தியத் தலைவரது படங்களும் இருக்காது. அதேநேரம் தமிழ் மொழியையும், இந்து மதத்தையும் கேவலமாகக் கணித்தார்கள். திருகோணமலையில் கோயிலில் இருந்த பிள்ளையார் சிலையைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டு, "பிள்ளையார் கடலில் குளிக்கச் சென்

றுவிட்டார்" எனச் சுவரில் சிங்களத்தில் எழுதியிருந் தார்கள் இராணுவத்தினர்.

இந்திய இராணுவம் செய்த கொடுமைகள் ஒன்றா? இரண்டா? ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு வரோ, பலரோ அல்லது அவர்களது உறவினரோ அவர்கள் செயலுக்கு பலியாகியும் பாதிக்கப்பட்டும் உள்ளனர், சொத்துக்களையும் இழந்துள்ளனர்.

அதேபோல இலங்கை இராணுவத்தாலும் கொல லப்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் ஏரா ளம். சேதமாக்கப்பட்ட சொத்துக்களும் கோடிக் கணக்கில் அடங்கும்.

இதற்காக எந்த அரசும் தமிழரிடம் மன்னிப்புக் கேட்கவில்லை. போகட்டும்! மனிதாபிமான ரீதியில் நஷ்டஈடு கொடுக்கும் முறைகூட கடைப்பிடிக்கப் படவில்லை.

சமாதானம் என்ற நிலை உருவாகிய பின்னரும் பலர் தம் சொந்த இடங்கட்குப் போகமுடியாமல், தொழில் செய்ய முடியாமல் அகதி முகாம்களிலும், உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியிருந்து அவதிப்படுகிறார்கள், சுதந்திரமாக நடமாடும் உரிமை இல்லை, கீரிமலை போன்ற புனித ஸ்தலங் கட்கு எமது சமய அனுஷ்டானத்திற்காகவோ, உல்லாசத்திற்காகவோ போகமுடியாமல் உள்ளது.

இளைஞர்கட்கு தொழிற் பயிற்சியோ, வேலை வாய்ப்புகள் கொடுக்கும் நடவடிக்கைகளோ எதுவும் நடைபெறவில்லை, தென்பகுதியினர் தமது பொருட் களைக் கொண்டுவந்து தமிழ் பகுதியில் சந்தைப் படுத்துவதிலேயே கண்ணாயிருக்கிறார்கள்.

வேலை வாய்ப்பின்மையாலும், சுதந்திரமான விளையாட்டு, கலைத்துறை போன்றவற்றில் ஈடு படும் வாய்ப்புகள் குறைவாக இருப்பதால் கலாசார சீர்கேடுகள் தலைதூக்கும் அறிகுறிகள் தென்படு கிறது.

பத்திரிகைக்காரர் விமலராசன் போன்றோர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்றைய பத்தி ரிகைக்காரர்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் கள் சில இடங்கட்குப் போக அனுமதி மறுக்கப் பட்டிருக்கிறது. கொலை மிரட்டலும் விடப்பட்டி ருக்கிறது.

இதையெல்லாம் தெரியாமலா? 16-11-03 திகதி கல்கி இதழில் ஆசிரியர் தலையங்கம் தீட்டி ஈழத் தமிழர்களைக் கொச்சைப்படுத்தியிருக்கிறார்கள்? சமாதானத்துக்கு எதிரான சக்திகட்குச் சார்பாக கருத்துக்களும் வெளியிடப்பட்டதோடு, தமிழர்கட் குப் புதிய தலைமை வேண்டும் என்றும், தமிழர் களின் மயக்கம் தெளிய வேண்டும் என்றும் கூறுவது வேடிக்கையானது.

இன்றைய காலகட்டத்தில்தான் ஈழத்தமிழர்கள் சரியான தலைமையின் கீழ் திரண்டிருக்கிறார்கள். தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் பாரபட்சம் அற்ற, லஞ்சம் அற்ற, சாதி, மத பேதமற்ற பெண் களுக்கும் எல்லா உரிமைகளும் கொண்ட, பணம், பதவி, அந்தஸ்து என்ற வேறுபாடின்றி நீதியான ஒரு நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள்.

அதேபோல் தமிழ் மொழியையும் தமது உயிரி னும் மேலாக நேசிக்கிறார்கள். நிர்வாகக் கட்ட மைப்பிலானாலும் சரி, சமூக மட்டத்திலாகினும் சரி தூய தமிழ்மொழி உபயோகத்தில் உள்ளது.

ஈழத்தில் மட்டும் அல்ல அன்று பாரதியும், விவேகானந்தரும் கண்ட கனவை ஈழத்தமிழர்கள் இன்று உலகமெல்லாம் செயல்படுத்திக் கொண் டிருக்கிறார்கள். இன்று உலகின் பல நாடுகளில் தூய தமிழில் வானொலி, தொலைக்காட்சி சேவைகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பல பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் கலப்பற்ற தமிழ் மொழியில் வெளிவருகிறது, சில இலவசமா கவும் விநியோகிக்கப்படுகிறது.

இது எல்லாம் இனாமாகக் கிடைத்தவை அல்ல. பல ஆயிரம் இளைஞர்களின் உயிர்த்தியாகத்தாலும், கொண்ட லட்சியத்திற்காக இன்று தமிழீழத்தில் செயற்பட்டுவரும் பல ஆயிரம் இளைஞர்களாலும், அவர்கட்கு வழிகாட்டி நிற்கும் தேசியத் தலை வர்தான் காரணம் என்பதைக் கண்ணியமாக யாவ ரும் ஏற்றுக்கொள்வர்.

அன்று எம்மை ஆளவந்த அந்நியர் எமது ஆல யங்களை இடித்து அந்தக் கற்கள் மூலம் தமக்குக் கோட்டைகள் காட்டினார்கள். இன்று அதே மண் ணில் பல இந்துக் கோயில்கள் ஈழத் தமிழர்களால் நடாத்தப்பட்டு வருவதோடு, சொந்தமாகக் காணி வாங்கி கோயில்களும் கட்டப்பட்டு வருகிறது.

பத்திரிகைகளின் சுதந்திரத்தில் தமிழக அரசு தலையிடுவதாகக் கூக்குரல் போடும் தமிழகப் பத்திரி கைகட்கு நிமலராசன் கொலை, கொலையாகத் தெரியவில்லையா? பத்திரிகை விற்பவரையே குறி வைத்து இராணுவம் சுடும் சம்பவங்கள் யாழ்ப்பா ணத்தில் நடப்பதை அவர்கள் அறியவில்லையா?

இந்திய இன்றைய அதிகாரிகள் மட்டும் அல்ல, முன்னாள் அதிகாரிகளும், ஒரு பதவியில், அல்லது பொறுப்பில் இல்லாத சாமிகளும் இலங்கையில் தனிநாடு பிரித்துக் கொடுக்கப்பட்டு விட்டது போல் கூப்பாடு போடுவது ஏனோ?

நடுநிலையாகிலும் சரி, அரசியல் ஆகிலும் சரி வாக்குறுதி பேணப்படுவதே தர்மம். விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை நோக்கிப் படையெடுத்த போது, இந்திய அரசு சார்பாகப் புலிகளிடம் கால அவகாசம் கேட்கப்பட்டதாக ஒரு செய்தி வந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள 40 ஆயிரம் படையின ரைப் பாதுகாப்பாகத் தென்பகுதிக்குக் கூட்டிச் செல்ல உள்ளதாகவும் அதுவரை தாக்குதல்களை நிறுத்தும்படி கேட்கப்பட்டது. ஆனால் அச்செய் திக்கு மாறாக பல குழல் பீரங்கி, உட்பட பெரும் கனரக ஆயுதங்கள் வடஇலங்கை இராணுவத்துக்கு விநி யோகிக்கப்பட்டது.

நீதி என்பது எல்லா நாடுகட்கும், எல்லா இனத் தவருக்கும் சமமானதாக இருக்க வேண்டும். ஈழத் தமிழர்கட்கு மட்டும் அதுவேறாக இருக்கமுடியாது.

பலமொழி பேசும் மக்கள் கொண்ட இந்திய நாட்டில் மாநில ரீதியாக அதிகாரம் பகிரப்பட்டு அவர்கள் தம்மைத் தாமே ஆளவில்லையா? அங்கு சமஷ்டி ஆட்சிமுறை அமையவில்லையா? "தமிழ் நாடு" என்ற பெயரில் தமிழகம் செயல்படவில்லையா? நாடு துண்டாடப்பட்டு விட்டதா?

இலங்கைத் தமிழர்கள் தாம் வாழும் பூமியை "தமிழீழம்" என்று சொல்வதில் என்ன தவறு?

இன்று தமிழர் பிரதேசத்தில் சுகாதார, கல்வி, தொழில், போக்குவரத்து, குடிநீர் விநியோகம் என இன்னும்பல அத்தியாவசிய அவசரத் தேவைகள் உள்ள நேரத்தில், **இந்தியா 500 மில்லியன் ரூபாவைக் கொட்டி தமிழர் தாயகத்தில் இராணுவத் தேவைக்காக ஒரு விமான நிலையத்தை அமைக்க முன்வந்தமை தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும், வேதனையையும் கொடுத்துள்ளது. இது ஒரு மனிதாபிமான ரீதியிலான உதவி அல்ல, இராணுவ விரிவாக்கலே இது.**

இலங்கையில் வாழும் தமிழர்களின் துன்பத்தைத் துடைக்க இந்தியா முன்வராவிட்டாலும் சரி, பல வருட போரின் பின், ஒரு போர் நிறுத்தத்தின் மூலம் சிங்கள அரசுடன் ஏற்பட்ட சமாதானப் பயணத்துக்குத் தடையாக இல்லாமல் உதவியாக இருக்க வேண்டும் என்பதே தமிழர்களின் இன்றைய எதிர்பார்ப்பாகும். ■

---

சிறுகதை

# விருந்து

– லெ. முருகபூபதி

*(பத்திரிகைத் துறையில் நீண்ட அனுபவம் பெற்ற திரு. முருகபூபதி ஒரு தரம்மிக்க எழுத்தாளருமாவார். தன் ஒவ்வொரு சிறிய அனுபவங்களையும் சிறுகதையாக வடிக்கும் யதார்த்தபூர்வமான ஆளுமை இவருக்குண்டு. அரசியல் வரலாற்றுக் கட்டுரைகளிலும், விமர்சனங்களிலும் இவர் வியத்தகு ஆற்றல் பெற்றவர். தற்போது அவுஸ்திரேலியாவில் வதியும் திரு. முருகபூபதிக்கும், இவ்வாக்கத்தின் வெளியீடான "இருபதாம் நூற்றாண்டுத் தமிழன் – கிழக்கும் மேற்கும் – அனைத்துலகத் தமிழ்ப் படைப்புக்களின் தொகுப்புக்கும்" எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். – ஆசிரியர்)*

**த**ருமலிங்கம் வீட்டின் போர்டிகோவில் நான்கு கார்களுக்கு மேல் நிறுத்தமுடியாது. அங்கு அவரது காரும், அவர் மனைவி ராஜேஸ்வரியினதும் கார்கள் நிற்கின்றன.

எஞ்சியிருந்த இடத்தை குலநாயகம், ரகுநாதனின் குடும்பத்தினர் வந்திறங்கிய கார்கள் பிடித்துக்கொண்டன.

மற்றவர்கள் வீதியோரத்தில் தத்தமது கார்களை நிறுத்திவிட்டு வந்தனர்.

தருமலிங்கம் தம்பதியர், அனைவரையும் முகம் மலர வரவேற்றனர்.

திருமதி. குலநாயகம், ராஜேஸ்வரியைக் கட்டி அணைத்து முத்தம் பொழிந்தாள். மற்றவர்கள் ரசித்துச் சிரித்தனர்.

குலநாயகமும் ரகுநாதனும் தருமலிங்கத்தை கை குலுக்கி வாழ்த்தினர்.

"ஐம்பதாவது வருட நிறைவுக்கும் இப்படி ஒரு விருந்துக்கு எங்களுக்கு அழைப்பு வரவேண்டும்"– கண்சிமிட்டிச் சொன்னார் ரகுநாதன்.

"அப்போது இங்கு 'நம்பர்கள்' கூடியிருக்கும்" – என்ற குலநாயகம், குலுங்கிச் சிரித்தார்.

"ஏன்?" – ஏக குரலில் சிலர்.

"மிஸ்டர் அன்ட் மிஸிஸ் தருமலிங்கத்திற்குப் பேரன் பேத்திகள் இருப்பினம்... என்ன... அப்படித்தானே...?" – தருமலிங்கத்தின் தோளில் இடித்தார் குலநாயகம்.

அங்கு சிரிப்பு கரைபுரண்டது. தருமலிங்கத்தின் பிள்ளைகள் மூவரும் சுறுசுறுப்பாக இயங்கினர்.

இடநெருக்கடியைத் தவிர்க்க தத்தம் அறைகளிலிருந்தும் கதிரைகளை எடுத்து வந்தனர்.

ஹோலின் ஒரு மூலையில் – மேசையில் பியர் – விஷ்கி–ஷம்பெயின் – வைன் போத்தல்கள், அவற்றுக்குத் தகுந்தவாறு வெவ்வேறு வடிவங்களில் கண்ணாடித் தம்ளர்கள்.

வறுத்த கஜு, கட்லட், சிப்ஸ் – சீஸ் – முதலானவற்றுடன் அவித்துப் பிளந்த முட்டைகள் உப்பும் – மிளகுதூளும் தூவப்பட்டு பிளேட்டுக்களில் தயாராயிருந்தன.

Family Room இல் பகல் போசன விருந்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தன.

"சமையல் வாசம் மூக்கைத் துளைத்து பசி வயிற்றைக் கிள்ளுது அக்கா" – என்றாள் ரகுநாதனின் மனைவி நளினி.

நளினி உரிமையோடு ராஜேஸ்வரியுடன் பழகுபவள். சமைத்த கறிவகைகளை பாத்திரங்கள் திறந்து ஒருமுறை நோட்டம் விட்ட பின்பே அவளது மூக்கை வாசனை துளைத்தது.

தருமலிங்கம் அவரவர்க்கு விரும்பியவாறு கிளாஸ்களில் மதுபானங்களை கலந்தார்.

"ரகு... நீர்... விஷ்கிக்கு 'கோக்' கலக்க மாட்டீர் என்ன... லெமனேட்... or சோடா"

"தேங்ஸ் தருமு... லெமனேட் விடும்".

ஆண்கள் 'சியர்ஸ்' சொல்லும் போது பெண்கள் Family Room பக்கம் கலைந்தனர்.

வருகைதந்த குடும்பத் தலைவிகள் ராஜேஸ்வரியிடம் வாழ்த்துக் கூறி பரிசுப் பார்சல்களைக் கொடுத்தனர்.

"இதெல்லாம் என்னத்துக்கு... சும்மா... உங்களை சாப்பிட வரச்சொன்னால் இதெல்லாம் காவிக்கொண்டு வரவேணுமே..."

"என்னக்கா அப்படிச் சொல்லிப் போட்டியள்... இது உங்கட இருபத்தி ஐந்தாவது வெடிங் அனிவெசரியல்லோ... சும்மா வாயால் வாழ்த்துச் சொன்னால் மட்டும் போதுமே... எங்கட ஞாபகமாக ஏதும் உங்களுக்குத் தர விரும்புகிறோம்... அவ்வளவுதான்." சொல்லிவிட்டு ராஜேஸ்வரியை கட்டி அணைத்தாள் நளினி.

"சரிதான் போடி..." – என்றாள் ராஜேஸ்வரி. அவள் குரலில் 'செல்லம்' தொனித்தது.

Family Room T.V இல் எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் சித்திராவும் இசைக்கலைஞர்கள் புடைசூழப் பாடிக்கொண்டிருந்தனர்.

"இது எங்க நடந்த புரோகிராம் ராஜேஸ்..." திருமதி. குலநாயகம் கேட்டாள்.

"எஸ்.பி. மெல்பனுக்கு வந்தசமயம் எடுத்து அன்றி..." – ராஜேஸ்வரியின் மகள் சுமித்திரா சொன்னாள்.

இயந்திரமயமான வாழ்வோட்டத்தில் வாராந்த விடுமுறை நாட்கள் இப்படி ஏதாவது ஒரு விருந்தில் கழிந்து விடுவதுண்டு.

இன்று இவர்களுக்கு தருமலிங்கத்தின் வீட்டில், அவரது இருபத்தைந்தாவது ஆண்டு திருமண நிறைவுதின விருந்து.

தருமலிங்கம் - ராஜேஸ்வரி தம்பதியராகி முதல்நாள் வெள்ளிக்கிழமையுடன் இருபத்தி ஐந்து ஆண்டுகளாகி விட்டன.

வெள்ளிக்கிழமை இருவரும் லீவு போட்டுவிட்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குப்போய் அர்ச்சனையும் செய்துவிட்டு வரும் வழியில் 'ஷொப்பிங்' முடித்துக் கொண்டனர்.

சனிக்கிழமை விருந்துக்கு என்ன கறி வைக்கலாம் என்பதை ஏற்கனவே நளினியுடன் ரெலிபோனில் கதைத்து ஒழுங்கு செய்து கொண்டாள் ராஜேஸ்வரி.

நளினி, விருந்துக்கு அணிசேர்க்க Dessert ஆக 'வட்டில் அப்பம்' செய்து கொண்டு வருவதாக உறுதியளித்தபடி இரண்டு பாத்திரங்களில் கொண்டுவந்தாள்.

"கண்டறியாத ஒரு 'அனிவஸரி' வந்ததும் போதும்... இங்க படுறபாடும் போதும்" - வெள்ளியன்று மாலை ராஜேஸ்வரி, நளினியிடம் அலுத்துக்கொண்ட போது, "பிள்ளையை பார்த்துக் கொள்ளுங்க ஒருக்கா ராஜேஸ் அக்காவுக்கு ஹெல்ப் பண்ணிட்டுவாரன்"-என்று ரகுநாதனுக்கு சொல்லிவிட்டு காரில் ஓடிவந்து, இறைச்சி வெட்டுவது முதல் காய்கறி நறுக்குவது வரையில் பல வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினாள் நளினி.

"நளபாகத்திற்கு ஒரு நளினி" என்றாள் ராஜேஸ்வரி.

"அதென்னம்மா நளபாகம்..." - தாயிடம் கேட்டாள் சுமி.

அவளுக்கு நளன் - தமயந்தி கதை சொன்னாள் ராஜேஸ்வரி.

நளினியால் சமையலுக்குக் கிட்டிய ஒத்துழைப்பை திருமதி. குலநாயகத்திடம் விதந்தாள் ராஜேஸ்வரி.

"உடன் பிறந்த அக்கா - தங்கைமார் கூட இப்படி இருக்கமாட்டினம்." - இந்த வாக்குமூலம் திருமதி. குலநாயகத்திடமிருந்து மட்டுமல்ல, ஊரில் தருமலிங்கம் குடும்பத்தை நன்கு தெரிந்தவர்களாலும் சொல்லப்பட்டதுதான்.

"ரகு... ஊர்ல ஏதும் லேட்டஸ்ட் நியூஸ்..." - ஹோலில் தருமலிங்கத்தின் குரல் கேட்டு, இங்கு - T.V இல் சித்திராவின் 'மரி மரி நின்னே' கேட்கும் அவரது மகள் சுமி, "அப்பாக்கு பொலிடிக்ஸை விட்டால் கதைக்க வேற ஒன்றும் இல்லை அன்ரி" - என்று நளினியைப் பார்த்து கன்னத்தில் குழிவிழ சிரித்தாள்.

"பொத்தடி வாயை... அந்த மனுஷனுக்கு கேட்டால் கத்தப்போகுது..." - ராஜேஸ்வரி சன்னமான குரலில் மகளை அடக்கினாள்.

"வேற என்ன அன்ரி... அங்கே 'புரப்ளம்' எண்டு இந்தப் பக்கம் வந்திட்டம். அம்மா - அப்பா இங்கே சிட்டிஷனும் எடுத்திட்டினம். வேலை - வீடு - கார் - எல்லாம் இருக்குது. நாங்களும் 'தரப்படுத்தல்' அது இது என்று எந்தப் பிரச்சினையும் இல்லாமல் யுனிவர்சிட்டியில் படிக்கிறோம். இங்கே - எலக்ஷன் வந்தால் லேபருக்கும் - லிபரலுக்கும் மாறி மாறி வோட்டும் போடுகிறார்கள். நாம் இப்போது... அவுஸ்திரேலியாவில் என்ன நடக்குது என்பதைத்தான் பார்க்கவேணும்... எப்பொழுது பார்த்தாலும் ஸ்ரீலங்கா பொலிடிக்ஸ்தான் அப்பா பேசுகிறார்; கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சுது அன்ரி".

சுமி பேசிக் கொண்டிருக்கும்போது Family Room யன்னல் கண்ணாடியின் வெளிப்புறமாக - டென்னிஸ் பந்து அடிபட்டு விழுந்தது.

"இவங்கள்... கண்ணாடியை உடைக்கப் போறான்கள்" - வீட்டின் பின்வளவில் கிரிக்கட் விளையாடும் தனதும் - விருந்தினர்களினதும் பிள்ளைகளை எச்சரிக்க எழுந்து போனாள் ராஜேஸ்வரி.

"இங்கே... பாருங்க அன்ரி... என்ர தம்பிமாருக்கோ - உங்கட பிள்ளைகளுக்கோ ஸ்ரீலங்காவைப் பற்றி ஏதும் கவலை இருக்கா... இங்கே இவங்கள்ட வாயில எப்போதும் கிரிக்கட்தான். ஸ்ரீலங்கா டீம் இங்க விளையாட வந்தாலும் இவர்கள் அவுஸ்திரேலியாவுக்குத்தான் சப்போர்ட். முரளிதரன் சிக்ஸர் அடித்தால், போலிங்கில் விக்கட்டுக்கள் எடுத்தால் Well Done முரளி Come On முரளி என்று கத்துவான்கள்".

"அது அவன் தமிழன் எண்டதுக்கா சுமி..." என்றாள் நளினி.

யன்னல் கண்ணாடியில் அடிபடும் விதமாக பந்தை அடிக்க வேண்டாம் என்று அன்பாக பிள்ளைகளை எச்சரித்துவிட்டுத் திரும்பிய ராஜேஸ்வரி... Family Room இல் இருந்த பெண்களுக்கு 'வைன்' பரிமாறினாள்.

நளினியின் தாய் மட்டும் தனக்கு Fanta கேட்டு வாங்கி அருந்தினார்.

"சுமி... அங்க அவங்கள் சிக்ஸர் அடிச்சு - கண்ணாடி உடைக்கமுடியாமல் களைச்சுப் போயிருப்பான்கள். ஏதும் Soft Drinks கொண்டுபோய்க் கொடும்" - என்றாள் திருமதி. ரகுநாதன்.

ஹோலில் குடும்பத் தலைவர்கள் மத்தியில் 'ஈழத்து அரசியல்' சரளமாகப் பேசப்பட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தம் முதல் முல்லைத்தீவு தாக்குதல் வரை அவரவர்க்குத் தெரிந்ததைச் சொன்னார்கள்.

"இப்ப... மேல் லோகத்தில் அவுங்கள் எல்லோரும் சேர்ந்து மகாநாடு கூடுவார்கள் - என்றார் தருமலிங்கம்.

"யார்... தருமு..." - ரகு.

"அவங்கள்தான் - பண்டாரநாயக்கா - ஜே.ஆர். - காமினி - முதலி - பிரேமதாஸ - அமிர் - செல்வா - திருச்செல்வம் - பொன்னம்பலம் - ராஜீவ்- இந்திரா... இப்ப இவையள் எல்லாம் மேல் லோகத்தில் தானே... கூடிக் கதைப்பினம், உன்னால நான் கெட்டன் என்னால நீ கெட்டாய் எண்டு..." தருமலிங்கத்துடன் இணைந்து அனைவரும் சிரித்தனர்.

"உவங்கள் மட்டுமே... யுத்தத்தில் கொல்லப்பட்ட இலங்கை - இந்திய ஆமிக்காரங்களும் எங்கட பொதுமக்களும் போராளிகளும் கூட உவங்களைப் பார்த்துத் திட்டித் தீர்ப்பார்கள். அடப் பாவிகளே... உங்களால் தானே... இன்றைக்கு நாங்களும் எங்கட குடும்பம், இனம், சனம், நாட்டை விட்டுப்போட்டு இங்கே வந்திருக்கிறோம் என்று சபிப்பார்கள்". தருமலிங்கத்தின் பேச்சைக் கேட்டு Family Room இல் இருந்த பெண்களும் சிரித்தனர்.

"நான் ஒரு 'ஜோக்' சொல்லட்டுமா... ஒரு மகஸின்'ல படிச்சது..." - என்ற ரகுநாதனின் முகத்தை போதையுடன் பார்த்தனர் தருமலிங்கமும் நண்பர்களும்.

"மேல் உலகத்தில் பிரேமாதாஸா இருக்கிறார். அவருக்கு முன்பும் பின்பும் அங்கு போன அவரது அரசியல்

எதிரிகள் முதலியும் காமினியும் கூடிநின்று கதைக்கிறார்கள்.

"முதலி அங்கே பார்... எங்கட எதிரி பிரேமா நிற்கிறான்... 'வேலை'யைக் கொடுப்போமா?"

"அட சும்மா இரு காமினி... அந்த ஆள் தனியாக வர இல்லை... தன்னுடைய Bodyguard களையும் தன்னுடன் அழைத்து வந்திருக்கிறார். கவனம்".

ரகுநாதனின் 'ஜோக்கை' கேட்டு அனைவரும் அட்டகாசமாகச் சிரித்தனர்.

"அதுவும் சரிதான் பிரேமதாஸ போகும்போது அவங்களிலும் சிலர் அநியாயமாக செத்துப் போனாங்கள்... உண்மைதான்..." என்றார் தருமலிங்கம்.

வீட்டின் கலகலப்பான சூழ்நிலைக்கு மத்தியில் அழைப்புமணி கேட்டது.

'அழைப்பு விடுத்த அனைவரும் வந்துவிட்ட பிறகு... இனி யார் வரப்போகிறார்கள்' - புருவம் உயர்த்தினாள் ராஜேஸ்வரி.

"யாரெண்டு பாருங்கப்பா..." கணவனிடம் சொன்னாள் ராஜேஸ்வரி.

"நீரே போய்ப் பாருங்கள்..."

தருமலிங்கம் மேலும் சில கிளாஸ்களில் நிரப்பிக் கொண்டிருந்தார்.

வாசல் கதவருகின் கண்ணாடியை மறைத்த 'கேர்டினை' விலக்கிப் பார்த்தாள்.

வெளியே இரண்டு இளைஞர்கள் File உம் கையுமாக நிற்கின்றார். கதவைத் திறவாமல் திரும்பிவந்து, "என்னப்பா... உங்களைத்தான்... யாரும் பொடியளை வரச் சொல்லியிருந்தனீங்களே?" கேட்டாள்.

மூன்றாவது கிளாஸை நிரப்பிக் கொண்டிருந்த தருமலிங்கம் கண்கள் சிவந்த நிலையில் மனைவியை ஏறிட்டுப் பார்த்து தலை சொறிந்தார்.

"யாரோ இரண்டு பொடியள்... File உடன் நிற்கிறான்கள்... ஏதும் டொனேஷனோ தெரியவில்லை... இந்த நேரத்தில கழுத்தறுக்க வந்திருக்கிறான்கள்." - ராஜேஸ்வரி முணுமுணுத்தாள்.

"ஏன் அவசரப்படுறீர்... யார் எண்டு பார்த்தால் போச்சுது... சிலவேளை சுமியோடு யூனிவர்சிட்டியில் படிக்கிற பொடியன்களாகவும் இருக்கும்... பொறும் நான் போய்ப் பார்க்கிறன்."

தருமலிங்கம் கதவைத் திறந்தார்.

"அண்ணே... எப்படி இருக்கிறீர்கள்... இன்றைக்கு வரச்சொன்னீர்கள்... அதுதான்" - ஒரு இளைஞன் முகம் மலர சிரித்தான்.

"விசிட்டர்ஸ் இருக்கினம் போலத் தெரியுது. வெரி சொறி அண்ணர். நாங்கள் போயிட்டு... அடுத்த வீக்கெண்டில் வாறம்..." - மற்ற இளைஞன் திரும்ப எத்தனித்தான்.

"அடடே... மறந்தே போனேன் தம்பிமாரே... இவ்வளவு தூரம் வந்திட்டுத் திரும்பிப் போறதே... இன்றைக்கு எங்கள வீட்டில... ஒரு சின்ன பார்ட்டி, அதனால்... உங்களை வரச்சொன்னதையும் மறந்து போனேன். வெரி வெரி சொறி தம்பி..." - என்றார் பவ்வியமாக.

"சிவபூசையில் கரடிகள்" - உள்ளே யாரோ சன்னமான குரலில் முணுமுணுத்தது - வெளியே நிற்கும் அந்த இளைஞர்களுக்கும் கேட்டது.

"இங்கே பூசையா நடக்குது?" - வந்தவர்கள் நினைத்தார்கள்; முணுமுணுக்கவில்லை.

வந்த இளைஞர்களும் அரை மனதுடன் தருமலிங்கத்தை பின்தொடர்ந்து உள்ளே வந்தனர்.

"தம்பி... இது மிஸ்டர் ரகுநாதன். இது குலநாயகம்... சொறி... தம்பி உம்மட பெயரை மறந்து போனேன்..." - அறிமுகப்படலத்தில் தருமலிங்கம்.

"நான் குமாரவேல்... குமார் என்று அழைப்பார்கள். இது என்ர ஃபிரண்ட் சந்திரபோஸ்... சந்திரன் என்று கூப்பிடலாம்."

ரகுநாதன் எழுந்து இருவருக்கும் கைகுலுக்கினார்.

குலநாயகம் எழும்பச் சிரமப்பட்டார்.

"இருங்கோ... இருங்கோ... என்ன குடிக்கிறியள்... விஷ்கி... பியர்..." - தருமலிங்கம் போத்தல்களைப் பார்த்துக் கொண்டு கேட்டார்.

"இல்லையண்ணர்... நாங்கள்... வந்தவிடயத்தை கதைச்சுப் போட்டுப் போகவேணும், இன்னும் சில வீடுகளுக்கும் வாரதெண்டு சொல்லி இருக்கிறம்..." - சந்திரன் மதுபானம் அருந்த மறுத்தான்.

"நாங்கள் கார் ஓடவேண்டும் அண்ணர்" என்றான் குமார்.

"அதனாலென்ன... சாப்பிட்டு போறது... எல்லாம் செமிச்சுப் போகும் தம்பி" - தருமலிங்கம் வற்புறுத்தினார்.

குமாரும் சந்திரனும் Fanta எடுத்துக் கொண்டனர்.

உள்ளே ராஜேஸ்வரி உணவு பரிமாறத் தயாராகிக் கொண்டிருந்தாள். மனதிற்குள் - "இவங்கள்... ஏன் இப்ப... வந்தான்கள்" - என்ற குமைச்சல். கணவனைத் திட்டிக் கொண்டாள்.

"என்ன விசேடம்... File உம் கையுமா வந்திருக்கிறீர்கள்... மெல்பனில் ஏதும் புரோகிராம் வருகிறதா..." - ரகுநாதன் கேட்டார்.

"இலங்கையில் - கிழக்கு மாகாணத்தில சம்பூர் கிராமத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சில ஏழைக் குடும்பங்களுக்குத் தையல் மெஷின் வாங்கிக் கொடுக்கவும் அந்தக் குடும்பத்துப் பிள்ளைகளுக்குப் படிக்கிறதுக்கு உதவி செய்யிறத்துக்கும் விரும்பியிருக்கிறோம்." - வந்ததன் நோக்கத்தை சந்திரன் விளக்கினான்.

"நீங்கள் ஏதும்... சங்கம்... மன்றங்களில் இருந்து வந்தனீங்களோ...?" ரகு புருவம் உயர்த்தியவாறு கேட்டார்.

"இல்லையண்ணா... அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. நாங்கள் சில நண்பர்கள் சேர்ந்து இப்படி ஏதும் வழியில் அங்கே கஷ்டப்படும் எங்கள் மக்களுக்கு உதவலாம் என்று விரும்புகிறோம். அதற்கு உங்களைப் போன்ற பெரிய ஆட்களிடம் ஆதரவு கேட்கிறோம். அவ்வளவுதான்." - கொண்டுவந்திருந்த File ஐ ரகுநாதனிடம் கொடுத்தான் குமார்.

Family Room இல் வைன், Fanta வுடன் T.V யில் பால சுப்பிரமணியத்தின் பாடல்களை இரசித்துக் கொண்டிருந்த பெண்களும் இந்த எதிர்பாராத 'சந்திப்பை' தரிசிக்க ஹோல் பக்கம் வந்தனர்.

சந்திரனும் குமாரும் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தனர்.

File இல் இருந்து சில பத்திரிகை நறுக்ககளையும் - சம்பூர் கிராமத்து பாதிப்பு விவரங்களையும் - உதவ முன்வந்து பணம் கொடுத்தவர்களின் பெயர், முகவரி, பட்டியலையும் தனித்தனியாக எடுத்துக் காட்டினான் குமார்.

குலநாயகம் வெகுசிரமப்பட்டு ஆசனத்தின் முனைக்கு வந்து வாங்கிப் பார்த்துவிட்டு அபிப்பிராயம் ஏதும் சொல்லாமல் திருப்பிக் கொடுத்தார்.

ரகுநாதன் அமைதியாக யாவற்றையும் படித்தார்.

"பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரங்களை எப்படி எடுத்தனீங்கள் தம்பிமாரே..." - தருமலிங்கம் கேட்டார்.

"திருகோணமலையில் ஒழுங்காக-நேர்மையாக செயல் படுகிற ஒரு சங்கம் ஊடாக இந்த விபரங்களை எடுத் தோம். சம்பூர் கிராமத்தில் மட்டும் ஐம்பதுக்கும் அதிக மான விதவைகள். அனைவரும் அநியாயமாக கொல்லப் பட்டவர்களின் மனைவிமார். பிள்ளைகளும் படிக்க வழி-வருமானம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்." - சந்திரன் விபரித்தான்.

"எல்லோருக்கும் தையல் மெஷின் வாங்கிக் கொடுத் தால்... அந்த கிராமத்தில்... யார் கூலிக்கு தைக்கப் போகி னம்... எப்படி வருமானம் வரப்போகுது... அவரவர் வீட்டு தையல் வேலைகளைப் பார்க்கத் தான் இது உதவும்... என்ன... நான் சொல்றது சரிதானே..." - எனச் சொல்லி விட்டு ஏதோ ஆழ்ந்த நகைச்சுவையை உதிர்த்த பெருமி தத்தில் சிரித்தார் குலநாயகம்.

"நல்ல விடயம்தான் தம்பி... மா ஓ சேதுங் சொன்ன மாதிரி... பசித்தவனுக்கு மீனைக் கொடுக்காதே... தூண்டி லைக் கொடு என்பது போல், இப்படி ஒரு புனர்வாழ்வுக்கு உதவமுன்வந்திருக்கிறீர்கள்" - என்றார் ரகுநாதன்.

"யார்... ஐஸே... மா சேதுங்?" சிவந்த கண்களை அகல விரித்து கேட்டார் குலநாயகம்.

"அது Uncle சீனாவின் முன்னாள் அதிபர்... பெரிய தலைவர்..." - என்றாள் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் படிக்கும் சுமித்திரா.

"ஓ... ஓ... அப்படியா?"

"அதே சமயம்... தம்பிமாரே... இன்னொன்றையும் சொல்ல வேண்டும். ஊரில் இந்த விதானைமாருக்கு ஐம்பது, நூறு கொடுத்தால் மரணச் சான்றிதழ் போலியாக எழுதி எடுக்கமுடியும். நான் முன்பு - A.G.A Office ஒன்றில தான் வேலை செய்தனான். இங்க இப்ப... ஒரு ஃபக்ட ரியில் 'டயர்' உருட்டுறன்... என்ர தலைவிதி..."

குமாருக்கு கோபம் பொங்கியது. அடக்கிக் கொண் டான். "இந்தாளும் அங்கே நன்றாக லஞ்சம் வாங்கிய பேர் வழியாக இருக்க வேண்டும்". நினைத்ததை சொல்ல வழியின்றி மனதில் சுமந்தான்.

"உள்ளே போனால் உண்மைகள் வெளியே வரும்" விந்தையை வியந்தான்.

A.G.A Office இல் ரகுநாதன் எப்படி இருந்திருப்பார்... இங்கு டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் சீரு டையுடன் எப்படி இயங்குவார்...? - குமார் கற்பனையி லும் சஞ்சரித்தான்.

"நேரம் போகுதப்பா... வாங்க சாப்பிடுவோம்". - ராஜேஸ்வரி Family Room இல் இருந்த அனைவருக்கும் பொதுவாக குரல் கொடுத்தாள்.

தருமலிங்கம் தட்டுத்தடுமாறி எழுந்து அனைவரையும் அழைத்தார்.

"தம்பிமார்... நீங்களும் வாங்க... சாப்பிடுவோம்... சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்".

"இல்லையண்ணர்... இன்னும் சில வீடுகளுக்கும் போகவேண்டும். இன்றைக்கு விட்டால் இனி அடுத்த வீக்கெண்ட்தான் வசதிப்படும். நாங்க புறப்படுறம்..." - வந்த காரியம் 'சூழ்நிலை'யால் சாத்தியப்படாது என்பதை தீர்மானித்துக் கொண்டான் சந்திரன்.

எனினும் புறப்படு முன்னர் நல்ல பதிலை - உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் இச்சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விடக் கூடாது என்பதிலும் சந்திரன் அக்கறையாக இருந்தான்.

"உங்களால் ஏதும் உதவ முடியுமா அண்ணர்?" - தருமலிங்கத்தைப் பார்த்துக் கேட்டான் சந்திரன்.

"நல்ல விடயம்தான் தம்பி... ஆனால் எனக்கு கொஞ் சம் அவகாசம் தேவை. இப்ப... சில 'கொமிட்மன்ட்ஸ்' வீட்டு 'மோட்கேஜ்' - சில பில்லுகள் செட்டில் பண்ண வேண்டும். ஊரில் இருக்கின்ற என்ர தம்பியின் குடும்பத் தையும் இங்கே அழைப்பதற்கு 'ஸ்பொன்ஸர்' செய்து போட்டேன். அவையளுக்கு பிளேன் டிக்கட்டுக்கும் நான் தான் அனுப்ப வேண்டும். என்னைத்தான் நம்பியிருக்கு துகள். Anyway இந்த விடயத்தை என்ர "பிரண்ட்ஸ்மா ருக்கும் சொல்லி ஏதும் நன்கொடை எடுத்துத்தரப் பார்க் கிறன்" - ஆனால்... இப்ப... எதற்கும் புரொமிஸ் பண்ண மாட்டேன். வெரி சொறி." - தருமலிங்கத்தின் 'நழுவல்' - வந்த இளைஞர்களுக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் புரிந் ததுதான்.

சந்திரன் பெருமூச்சு விட்டான்.

ரகுநாதன், குமாரின் தோளில் கை வைத்து... "தம்பி... உம்மட பெயர் குமார்தானே... தம்பி குமார்... இந்த சம்பூர் கிராமத்து விதவைகளைப் பற்றிய விபரம் அடங்கிய பட்டி யலை... அதில் ஒரு 'ஃபோட்டோ கொப்பி' எடுத்துத்தர முடியுமா... அடுத்த மாதம் கன்பராவில் மனித உரிமைகள் மகாநாடு நடக்கப் போகுது... ஈழப் படுகொலைகள் பற்றிய புள்ளிவிபர சேகரிப்புக்கு இந்தப் பட்டியலும் உதவும்... எப்படி என்ர ஐடியா தம்பி..." - கண்ணைச் சிமிட்டினார்.

குமாருக்கு எரிச்சல் பற்றிக்கொண்ட வந்தது... அடக் கிக் கொண்டான்.

ரகுநாதனுக்கு பதில் ஒன்றும் சொல்லாமல், "சந்திரன், புறப்படுவோம்... சும்மா நேரம் வீணாகிக் கொண்டி ருக்குது... மற்ற இடங்களுக்கும் போகவேண்டும்." - குமார் சந்திரனின் கையைப் பிடித்து இழுத்தான்.

"வன் மினிட் பிளீஸ்..." சுமித்திரா அவர்களை தடுத்து நிறுத்திவிட்டு உள்ளே போய் இரண்டு நிமிடங்களில் திரும்பினாள்.

வரும்போது அவள் கையில் மூன்று ஐம்பது டொலர் நோட்டுகள்.

"இந்தாருங்க... உங்க 'சரிட்டி' வேலைக்கு எங்கட சிறிய உதவி". - சந்திரனிடம் நீட்டினாள்.

இருவரும் அவளை ஏறிட்டுப் பார்த்து நன்றி கலந்த புன்னகையை உதிர்த்தனர்.

"ஏய்... சுமி... இதென்ன... உனக்கு எங்கால 150 டொலர்..." - ராஜேஸ்வரி மகளை உற்றுப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் பல அர்த்தங்கள்.

"Books வாங்க வைச்சிருந்தன் அம்மா... அடுத்த மாதம் கிடைக்கும் Aust Study காசில் பிறகு வாங்கலாம் அம்மா..." - தாயைப் பார்க்காமலேயே சொன்னாள் சுமி.

ரகுநாதன் - குலநாயகம் குடும்பத்தினர் பிளேட்டுக் களில் உணவுகளைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

"உங்கட பெயர்..." - லிஸ்டில் எழுதுவதற்காக சந்திரன் கேட்டான்.

"நாம் சுமித்திரா... என்ர பெயர் எழுதவேண்டாம். தருமலிங்கம் அன்ட் பெமிலி என்று எழுதலாம். எழுதா விட்டாலும் பரவாயில்லை. யாரோ ஒரு குடும்பத்துக்கு உதவினால் போதும்."

குமாரும் சந்திரனும், சுமித்திராவுக்கு ஏக குரலில் நன்றி கூறினர். மறுகணம் அங்கிருந்து விடை பெற்றனர்.

தருமலிங்கம் கதவை மூடினார். ■

# இம்மாத சோதிடம் – பெப்ரவரி 2004

– கணித்தவர்: ஜோதிட சக்கரவர்த்தி டி.வி. புகழ் டாக்டர் முருகு இராசேந்திரன், டி.லிட்
33, வடபழனி ஆண்டவர் கோயில் தெரு, வடபழனி, சென்னை 26. போன்:2488103, 24839532, 23763001, 23762532 செல்: 31021606

**மேஷம்:** (அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம்)

அன்புள்ள மேஷ ராசி நேயர்களே! உங்களுக்குச் சோதனைகளை அதிகம் ஆக்கக்கூடிய மாதமாகும். தேவையற்ற அலைச்சல், டென்ஷனை உண்டாக்கக்கூடிய மாதம் என்பதால் உஷாராகச் செயல்படவேண்டியது அவசியம். உங்கள் ராசியாதிபதி ஆட்சி பெற்றுச் சஞ்சரித்தாலும் குரு, சனி வக்ரம் பெற்றிருப்பதால் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கணும். உங்கள் தேகநிலை பாதிக்கும். வீணான செலவுகளையும் எதிர்கொள்ள நேரிடும். குடும்பத்தில் ஒற்றுமை குறையும். மனக்குழப்பம் அதிகரிக்கும். பொருளாதார நிலையும் சரியாக அமையாது. கடன்கள் தொல்லையைத் தரும். தொழிலும் வியாபாரமும் மந்தமாக நடைபெற்று லாபமும் குறையக்கூடும். கூட்டாளி, வாழ்க்கைத் துணையிடமும் விட்டுக்கொடுத்துப்போவது உத்தமம். உத்தியோகத்தில் வேலைப் பளுகூடும். இடமாற்றம் உண்டாகும். அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் புகழ்பெறுவார்கள். ஸ்பெகுலேஷனால் தன விரயம் உண்டாகும்.

சந்திராஷ்டமம்: 13-02-2004 மாலை 6.40 மணிமுதல் 15-02-2004 இரவு 9.32 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி தவிர்க்கவும்.

**ரிஷபம்:** (கிருத்திகை 2,3,4ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ம் பாதங்கள்)

அன்புள்ள ரிஷப ராசி நேயர்களே! வெற்றிகள் தொடரக்கூடிய உன்னதமான மாதமாகும். உங்கள் ஜென்மராசிக்கு சுக்கிரன் சாதகமாக சஞ்சரிப்பதும் சனி, குரு வக்ரமாக சஞ்சரிப்பதனால் பிரச்சனைகளை எளிதில் சமாளிக்க முடியும். உங்கள் உடல்நலம் சுமாராகக் காணப்படும். குடும்பத்தில் ஏற்பட்ட கவலைகள் கஷ்டங்கள் யாவும் படிப்படியாக விலகும். பொருளாதாரம் சற்றே சுமாரான பணவரவுகளுடன் காணப்படும் கடன்கள் மெல்லவே விலகும். கணவன் – மனைவி உறவு திருப்திகரமாகக் காணப்படும். திருமண சுபகாரிய முயற்சிகளை நிதானமாக மேற்கொள்ள முடியும். தொழிலும் வியாபாரமும் ஓரளவுக்கு லாபம் தரும். கொடுக்கல் வாங்கல் பெரிய தொகைகளை ஈடுபடுத்தும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் அனுசரித்துப் போவது நல்லது. மாணவர்கள் கல்வியில் படிப்படியான ஏற்றமடைவார்கள். ஸ்பெகுலேஷனால் உயர்வான தனவரவு ஏற்படும்.

சந்திராஷ்டமம்: 15-02-2004 இரவு 9.32 மணிமுதல் 17-02-2004 இரவு 11.56 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி தவிர்க்கவும்.

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3,4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்கள்)

அன்புள்ள மிதுன ராசி நேயர்களே! உங்களுடைய வாழ்வில் ஏற்றமடையக்கூடிய உன்னதமான மாதமாகும். குருபகவானும், சனிபகவானும் வக்ரமடைந்து காணப்படுவதும் லாபஸ்தானத்தில் ராகு, செவ்வாய் சஞ்சரிப்பதும் தடைப்பட்ட சுபகாரியங்கள் நடைபெறும் அமைப்பாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட உடல்நலக் கோளாறுகள் படிப்படியாக விலகும். செலவுகளும் குறைந்திடும். வெளியூர்ப் பயணங்களினால் சற்றே ஆதாயமும் நன்மையும் உண்டாகும். வியாபாரம் சற்றே மந்தமான நிலையிலிருந்து விலகி ஏற்றம் உண்டாகும். வேலை வாய்ப்பு சிலருக்குத் தாமதித்து ஏற்படும். பதவி உயர்வுக்கு உங்கள் பெயரைச் சிபாரிசு செய்வார்கள். மாணவர்கள் சிறப்பான மதிப்பெண்கள் பெறுவார்கள். வெளிவட்டாரப் பழக்கம் சற்று உதவிகரமாகத்தான் அமையப்பெறும். ஸ்பெகுலேஷனால் தன ஆதாயம் ஏற்படும்.

சந்திராஷ்டமம்: 17-02-2004 இரவு 11.56 மணிமுதல் 20-02-2004 அதிகாலை 2.31 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி தவிர்க்கவும்.

**கடகம்:** (புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)

அன்புள்ள கடக ராசி நேயர்களே! ஏற்றங்கள் ஏற்படுத்தக்கூடிய மிகவும் அற்புதமான மாதமாகும். உங்களுக்கு குரு, சனி வக்ரமடைந்து காணப்படும் காரணத்தினாலும் செவ்வாய், ராகுவும் 10ம் வீட்டில் இருப்பதும் ஓரளவுக்கு நல்ல அனுகூலமான பலன்களை உண்டாக்கும். இம்மாதம் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டாலும் உற்சாகத்தை அளிக்கக்கூடிய மாதமாகும். சொந்தத் தொழிலில் மந்தமும் போட்டியும், பொறாமைகளும் உருவானாலும் உங்கள் கடின உழைப்பின் பலனை அடைவீர்கள். கணவன் – மனைவி குடும்பத்தில் ஒற்றுமையாகக் காணப்படுவார்கள். மணமாகாதவருக்கு முயற்சியை மேற்கொள்ளலாம். நீண்ட நாள் எண்ணிய காரியம் சற்றே தாமதத்துடன் முடியும். எடுக்கும் காரியங்கள் யாவும் நிதானமாக நடைபெற்று மனத் திருப்தியைத்தரும். ஸ்பெகுலேஷன் நல்ல தனவரவு ஏற்படும்.

சந்திராஷ்டமம்: 20-02-2004 அதிகாலை 2.31 மணிமுதல் 22-02-2004 காலை 7.15 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி தவிர்க்கவும்.

**சிம்மம்:** (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

அன்புள்ள சிம்ம ராசி நேயர்களே! சொகுசான வாழ்க்கையை ஏற்படுத்தக்கூடிய உன்னதமான மாதமாகும். உங்கள் ஜென்மராசிக்கு 3ல் கேது 6ல் சூரியனும் காணப்படுவதினால் நீங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும். கடந்த மாதம் சோதனைகள் எல்லாம் விலகி ஏற்றமிகு காலமாகும். நல்ல உடல் ஆரோக்கியமும் பொருளாதார ஏற்றமும் மன அமைதியையும் உண்டாக்கும். கடன்கள் யாவும் விலகிடும். புதுச்சொத்து வாங்கும் அமைப்பும் புதிய தொழில் தொடங்கவும் செய்ய ஏற்ற மாதமாகும். சுபகாரியமும் மனம்போல் முடியும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். சகோதரர்கள் ஒற்றுமை அனுகூலம் உண்டாகும். மக்கட்பேறு கிட்டும். இனிமையான பயணங்கள் நிறைவேறும். அரசியல்வாதிகளின் செல்வம், செல்வாக்கு உயரும். கலைஞர்கள் புகழ் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் உயரக்கூடிய உன்னதமான மாதமாகும்.

சந்திராஷ்டமம்: 22-02-2004 காலை 7.15 மணிமுதல் 24-02-2004 மதியம் 3.12 மணிவரை உஷார் தேவை. புதுமுயற்சி தவிர்க்கவும்.

**கன்னி:** (உத்திரம் 2,3,4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2ம் பாதங்கள்)

அன்புள்ள கன்னி ராசி நேயர்களே! ஏற்றமும் இல்லாத இறக்கமும் இல்லாத சுமாரான மாதமாகும். குரு பகவானும், சனி பகவானும் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதும் இம்மாதம் 13ம் திகதி முதல் சூரியன் 6ம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதும் சற்றுச் சாதகமான கிரக அமைப்பாகும். உங்கள் தேகநிலை சுமாராகத்தான் காணப்படும். கடந்தகால சோதனைகள் ஓரளவுக்குக் குறையும். கடன்கள் படிப்படியாக விலகிடும். தொழில் உத்தியோக ரீதியாகச் சிலவகையில் நற்பலன்கள் ஏற்பட்டாலும் கவனமாகவும் மிக நிதானமாகவும் நடப்பது உத்தமம். வியபாரமும் சுமாராக நடைபெறும். கணவன் - மனைவி உறவு திருப்தியாகவும் சற்றே ஒற்றுமையாகவும் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் சற்றே கவனமாகச் செயல்படுவது உத்தமம். ஸ்பெகுலேஷனில் அதிக முதலீடு செய்வதினைத் தவிர்த்தல் மிகவும் உத்தமம்.

சந்திராஷ்டமம்: 24-02-2004 மதியம் 3.12 மணிமுதல் 27-02-2004 அதிகாலை 2.35 மணிவரை உஷார் தேவை. புதுமுயற்சி கூடாது.

**துலாம்:** (சித்திரை 3,4ம் பாதம், ஸ்வாதி, விசாகம் 1,2,3ம் பாதங்கள்)

அன்புள்ள துலா ராசி நேயர்களே! சுமாரான பலன்களை உண்டாக்கக்கூடிய உன்னதமான மாதமாகும். உங்களின் ஜென்மராசிக்கு சுகஸ்தானமாகிய 4ம் வீட்டில் சூரியன் காணப்படுவதும், குரு, சனி வக்ரகதியில் காணப்படுவதும் தேவையற்ற அலைச்சல்களை மேலோங்கச் செய்யும். உங்களுக்கு வாயு சம்பந்த உடல் உபாதைகள் ஏற்பட்டு விலகும். புத்திரர்களால் சிறு சிறு குழப்பங்கள் ஏற்படும். தொழில், உத்தியோக ரீதியாக அடிக்கடி பயணம் மேற்கொள்வதால் சற்றே அலைச்சலும் ஏற்பட்டாலும் அனுகூலம் அதிகம் இருக்கும். வேலை வாய்ப்பில் ஒரு நண்பரால் நன்மை நடக்கும். புதிய பல முயற்சிகளை மேற்கொண்டு கூட்டுத்தொழில் தொடங்குவீர்கள். ஓரளவுக்குச் சுமாரான தனலாபம் கிடைத்திடும். மன அமைதி ஏற்படும். மாணவர்கள் விளையாட்டுத் துறைகளில் சாதனைகளைப் படைத்திடுவார்கள். ஸ்பெகுலேஷன் சுமார் பலனைத் தந்திடும்.

சந்திராஷ்டமம்: 30-01-2004 அதிகாலை 6.03 மணிமுதல் 02-02-2004 காலை 7.18 மணிவரை மற்றும் 27-02-2004 அதிகாலை 2.35 மணிமுதல் 28-02-2004 மதியம் 3.25 மணிவரை உஷார் தேவை. புதுமுயற்சி கூடாது.

**விருச்சிகம்:** (விருச்சிகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)

அன்புள்ள விருச்சிக ராசி நேயர்களே! உங்கள் ஜென்ம ராசிக்கு குரு, சனி வக்ரகதியில் சஞ்சரிப்பதும் 6ம் வீட்டில் ராகு, செவ்வாய் காணப்படுவதும் அனுகூலமான அமைப்பாகும். உங்கள் சோதனைகள் படிப்படியாகக் குறையும். இம்மாதம் உடல்நலம் தேறிவிடும். பொருளாதார நிலையில் இருந்த தேக்க நிலையும் சிறிது விலகிடும். எதிர்பார்த்த செய்திகள் சுமாரான பலனைத் தரும். சுபகாரிய முயற்சிகள் நடைபெறும். கணவன் - மனைவி உறவில் திருப்தியானதான நிலை இருக்கும். பெற்றவர்களுக்குப் பிள்ளை சற்றுச் சாதகமாக அமைவார்கள். புதிய முயற்சிகள் ஓரளவுக்குக் கை கொடுக்கும். மனதில் எண்ணிய எண்ணங்களைச் செயல் வடிவம் ஆக்க உழைப்பீர்கள். வெளிவட்டாரப் பழக்கம் உதவியாக அமைந்துவிடும். கற்ற கல்வியில் ஏற்றமும் கடன்களில் சிறிது மாற்றமும் உண்டாகும். கமிஷன், ஏஜென்ஸி போன்றவைகளால் ஏற்றம் அடைவீர்கள்.

சந்திராஷ்டமம்: 02-02-2004 காலை 7.18 மணிமுதல் 04-02-2004 மாலை 6.49 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி கூடாது.

**தனுசு:** (மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம்)

அன்புள்ள தனுசு ராசி நேயர்களே! உங்கள் ராசியாதிபதியாகிய குருபகவான் வக்ரம் பெற்றிருப்பதாலும் ஏழில் சனி, 5ம் இடத்தில் ராகு காணப்படுகின்ற காரணத்திலும் எதிர்பாராத சிக்கலை உண்டாக்கக்கூடிய மாதமாகும். குடும்ப வாழ்வில் சிறு சிறு பிரச்சனைகளையும் பெரியதாக எடுத்துக்கொண்டு மனதில் வேதனையை அதிகமாக்கிக் கொள்வீர்கள். கணவன் - மனைவி உறவு திருப்தியைத் தராது. பொருளாதார நிலையில் திடீரென்று ஒரு தேக்க நிலை ஏற்பட்டுக் கடன்களில் சிக்கிட நேரிடும். தொழில் வியாபாரம் சிறப்பாக அமையாது நெருங்கியவர்களால் மன அமைதி குறையும். எந்த சுபகாரியமான முயற்சிகளையும் தற்போது தவிர்ப்பது உத்தமம். மாணவர்களுக்கு வீண் பழிச்சொல் உண்டாகும். உத்தியோகத்திலே அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்காது. ஸ்பெகுலேஷனைத் தவிர்ப்பது உத்தமமாகும்.

சந்திராஷ்டமம்: 04-02-2004 மாலை 5.34 மணிமுதல் 07-02-2004 அதிகாலை 3.20 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி கூடாது.

**மகரம்:** (உத்திராடம் 2,3,4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ம் பாதங்கள்)

அன்புள்ள மகர ராசி நேயர்களே! உங்கள் ஜென்ம ராசிக்கு சுகஸ்தானமான நான்காம் வீட்டில் செவ்வாயும், ராகுவும் காணப்படுவதினால் உங்களுக்கு வீண் அலைச்சல். டென்ஷனும், எதிர்பாராத விரயம் செலவுகளை உண்டாக்கும். இந்த மாதமும் உங்களுக்கு உடல்நலம் கெடும். மருத்துவ செலவுகளும் வீண் பயணங்களால் அலைச்சல், பண நெருக்கடிகள், கடன்கள் மேலோங்கும். அசையாத சொத்துச் செலவினை ஏற்படுத்தும். அரசு மூலம் கெடுபிடிகள் தோன்றும். தொழில் உத்தியோக ரீதியாக நிம்மதியான நிலைகள் தோன்றாது. பொருள் தேக்கம் வியாபார நிலையில் இருக்கும் போட்டிகளையும் பொறாமைகளையும் எதிர்கொள்ளச் சில செலவுகளை மேற்கொள்ள நேரிடும். எந்தவிதமான வாக்குறுதிகளையோ முன்ஜாமீன் இருப்பதையோ தவிர்ப்பது நல்லது. ஸ்பெகுலேஷனைத் தவிர்த்தல் உத்தமமாகும்.

சந்திராஷ்டமம்: 07-02-2004 அதிகாலை 3.20 மணி முதல் 09-02-2004 காலை 9.49 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி கூடாது.

**கும்பம்:** (அவிட்டம் 3,4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3ம் பாதங்கள்)

அன்புள்ள கும்ப ராசி நேயர்களே! குருவும், சனியும் வக்ரமடைந்து காணப்பட்டாலும் 3ம் வீட்டில் செவ்வாயும், ராகுவும் காணப்படுவது எந்தவிதமான சிக்கலையும் எளிதில் சமாளிக்க முடியும். இம்மாதம் சிறு சிறு உடல் உபாதைகள் ஜலத் தொடர்புள்ள நோய்களால் ஏற்படும். புத்திரர்களால்

சிறு மனச்சஞ்சலமும் ஏற்பட்டாலும் அவர்களால் அனுகூலமும் ஏற்படும். சிலருக்கு மந்தமாக தொழில், வியாபாரம் நடைபெற்றாலும் உங்களின் திறமைகளால் வெற்றியினை அடைவீர்கள். கூட்டுத் தொழிலில் சற்றே கவனமாகச் செயல்பட்டால் தான் லாபம் கூடும். சிலர் வெளியூர்ப் பயணங்களினால் அலைச்சலை மேற்கொண்டாலும் நல்ல அனுகூலத்தை அடைவீர்கள். எந்த ஒரு செயலையும் நிதானமாகச் செய்து சமாளித்துவிடுவீர்கள். கலைஞர்கள், அரசியல்வாதிகள் புகழ்பெற்றுத் திகழ்ந்திடுவார்கள். கமிஷன், ஏஜென்ஸி, காண்டிராக்ட் லாபம் தரும்.

*சந்திராஷ்டமம்: 09-02-2004 இரவு 9.49 மணிமுதல் 11-02-2004 மதியம் 2.50 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி கூடாது.*

***மீனம்:*** *(பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)*



அன்புள்ள மீன ராசி நேயர்களே! குருபகவானும், சனி பகவானும் வக்ரம் பெற்றிருப்பதும், சூரியன் லாபஸ்தானத்தில் இருப்பதும் நல்ல அமைப்பாகும். தடைப்பட்ட சுபகாரியங்கள் நடைபெறும். குடும்ப வாழ்வில் மன அமைதி கிடைக்கும். கணவன் - மனைவி ஒற்றுமையாகக் காணப்படுவீர்கள். பூமி வாங்கும் யோகமும் வண்டி வாகனம் வாங்கும் நிலையும் ஏற்படும். சகோதரவழியில் கூட்டாகத் தொழில் உண்டாகிச் சாதகப் பலன் அடைவீர்கள். உத்தியோகத்தில் விரும்பிய இடமாறுதலும் பதவி உயர்வும் கிடைத்திடும். திருமணம் ஆகாதவர்களுக்கு மணமாகும். புத்திர பாக்கியம் வேண்டுவோர்க்கு இந்த மாதம் அமையப்பெற்றுப் பூரிப்படைவீர்கள். மாணவர்கள் கல்வியில் சாதனைகளைப் படைப்பார்கள். கலைஞர்கள் புகழ் பெறுவார்கள். அரசில்வாதிகள் சாதனை களைப் படைப்பார்கள். ஸ்பெகுலேஷனால் தனவரவுகள் உண்டாகிக் காணப்படும்.

*சந்திராஷ்டமம்: 11-02-2004 மதியம் 2.50 மணிமுதல் 13-02-2004 மாலை 6.40 மணிவரை உஷார் தேவை. புது முயற்சி கூடாது.*

**சமையல் பகுதி:**

## *கோழிப் பொங்கல்*

– பாரதி

*அன்பார்ந்த வாசகர்களே!*

*கோழிப் பொங்கல் வடமாராட்சிப் பகுதியில் பிரபல்யமானது. அவர்களிமிருந்து பெற்றுக்கொண்ட தகவலின்படி இது எழுதப்படுகிறது.*

*தேவையான பொருட்கள்:*

*1/2 படி சிவத்தப் பச்சையரிசி, 1/2 றாத்தல் சின்ன வெங்காயம், 1 கோழி, சிறிதளவு தேங்காய்ப்பால், தேவையானளவு மிளகாய்த்தூள், 3 பச்சைமிளகாய், உப்பு*

*செய்முறை:-*

*தண்ணீரைக் கொதிக்க வைத்து, கோழியைப் பெரிய துண்டுகளாக வெட்டி அவியவிடவும். அரை அவியலில் அரிசியையும், அரிந்த பச்சைமிளகாய், சின்ன வெங்காயத்தை இரண்டாகப் பிளந்து போட்டு வேகவிட்டபின் தேங்காய்ப்பால், மிளகாய்த்தூள், உப்பு என்பன சேர்த்து, வெந்ததும் இறக்கவும்.*

**ஒரு கடிதம்:**



*ஆசிரியர்க்கு,*

*நன்றி! திறமைக்கு முக்கியத்துவம் கொடுத்து நெஞ்சார வாழ்த்தி, மனதாரப் பாராட்டியதற்கும், எம் மண்ணின் மைந்தர் மாவீரர் நாள் அங்கீகாரத்தை வெளிக் கொணர்ந்தமைக்கும் நாம் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*லண்டனில் பிறந்து வளர்ந்த நாம் திறமைக்கு ஊக்கம் கொடுத்து எமது தனிப்பட்ட சுக துக்கங்களைத் தவிர்த்து எவ்வளவு தூரம் முயற்சி எடுத்தோம் என்பதை எம்மோடு ஒத்துழைக்கும் அனைவரும் அறிவார்கள். அதேநேரத்தில் எங்களை இந்த நிலைக்குக் கொண்டுவர பலர் உதவி இருக்கிறார்கள். அவர்களில் ஆசிரியர்கள், அதிபர்கள், ஆங்கிலக் கீ போர்ட் (Keyboard) ஆசிரியர் Jonna, திருமதி. சிவசக்தி சிவனேசன், திருமதி. சரஸ்வதி உதயக்குமார், திரு. சாரங்கன் ஸ்ரீரங்கநாதன், திருமதி. ராகினி ராஜகோபால், எமக்கு முதல் மேடை அனுபவம் கொடுத்த பூபாளம் நண்பர்கள், அடுத்து ஐரோப்பிய உலகுக்கு அறிமுகப்படுத்திய திருமதி. யோகா தில்லைநாதன், திரு. விமல் சொக்கநாதன், மேலும் ஊடகங்கள் TRT, தீபம், TTN, CITV, ETBC, IBC புதினம், வடலி ஆகியவையுடன் எங்களின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஒளிபரப்பி வரும் லண்டன் தீபம் கலையகம், எமது நேரடி உரையாடலை ஒளிபரப்பிய TTN France கலையகம், அத்துடன் தற்போது நாடகத் துறையிலும் இசை அனுபவத்தைக் கொடுத்துவரும் திரு. திருமதி. பாலேந்திரா அவர்கள்.*

*மேற்கூறிய அனைவருக்கும், சகல அன்பு ஆதரவாளர்களுக்கும் எமது நன்றி!*

3, Pitfold Close, London SE12 9JK.
Tel: 020 8857 4022

செல்வா, தயா, துஷி, தனு & நண்பர்கள்,
T.T & Friends

AmmA

அம்மா

**modern asian cuisine**
**fully Licenced Bar & Restaurant**

*MODERN INDIAN & SRI LANKAN RESTURANT & TAKEAWAY*

*90 இருக்கைகள் கொண்ட குளிரூட்டப்பட்ட உணவகம்*

தரம், சுவை, அன்பான உபசரிப்பு என்றாலே அது இன்று அம்மா ஆகிவிட்டது...

*அம்மா 020 8772 7146*

**7 Days 11.00 am - 12.00 Midnight**

*Mother's cooking is the best cooking in the world, so let Amma to cook for you.*

**138 Mitcham Road, Tooting SW17 9NH**

**Tel: 020 8772 7146 Fax: 020 8682 0077**

*£15 பவுண்களுக்கு மேல் உணவு அருந்தி 10 வீத கழிவைப் பெறுங்கள்*

*WE DO NOT ACCEPT CREDIT CARD UNDER £5.00*

*With guranteed bankers card only*



**புதினம்**
**PUTHINAM**

மாதம் இருமுறை லண்டன் தமிழர்களின் அபிமான இலவசப் பத்திரிகை

**38 MOFFAT ROAD, TOOTING, LONDON SW17 7EZ**

**TEL: 020 8767 8004 FAX: 020 8767 7866**



## நவீனத்துவமான வணிக விளம்பரங்களுக்கு...

இதோ விரைவாகவும், தெளிவாகவும், நினைவில் நிற்கும் தன்மையுமான சினிமாத் தொழில் கலந்த விளம்பரங்கள். ஐரோப்பிய வணிக நிறுவனங்களுக்கான புதிய-நவீன-கணனித்துவ (Graphics) தொழில்நுட்ப முன்னோடியான அமைப்புக்களைக் கொண்டது. உங்கள் தொழில்களை உருவாக்கவும், உயர்த்தவும் எமது நிறுவனத்தை நாடுங் கள். உத்திகளுடன் உற்சாகமூட்டும் எமது விளம்பர உருவாக்கத்தை ஒருமுறை பரீட்சியுங்கள். உண்மையை உணர்வீர்கள்!

விபரங்கட்கு:- தொலைபேசி: **020 8697 7843**

## ஏற்றுமதி – இறக்குமதிக்காக...

எமது நிறுவனம் இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கும் பலவித பொருட்களையும் ஏற்றுமதி – இறக்குமதி செய்விக்கின்றது. திருமணத் தேவைகள், வணிகத் தேவைகள், ஆலயங்களுக்கான சிலைகள், விக்கிரகங்கள், கலைப் பொருட்கள், ஆராதனைக்கான திரவியங்கள், ஓவியங்கள் உட்பட அனைத்திற்கும் தொடர்புகொள்க. துரித சேவையும், விரிந்தபணிகட்காகவும் எம்மிடம் வாருங்கள்.

தொடர்புகட்கு:- தொலைபேசி: **020 8697 7843**


## திருமுருகன் அறிவகம்:

கீழ்க்காணும் ரமணிச்சந்திரனின் நூல்களும் ஏனைய யாவும் விற்பனைக்காக உள்ளன. தயவுசெய்து தமிழர் தகவல் அலுவலகத்துடன் தொடர்புகொள்க.

*ரமணிச்சந்திரனின் நூல்கள்:—*

| | |
|---|---|
| 1. என்ன என்ன ஆசைகளோ! | £ 2.25 |
| 2. என் உயிரே கண்ணம்மா | £ 1.75 |
| 3. வைரமலர் | £ 2.50 |
| 4. மெல்லத் திறந்தது கனவு | £ 2.90 |
| 5. பொன்மகள் வந்தாள் | £ 2.00 |
| 6. நாளை வரும் நிலவு | £ 2.25 |
| 7. என் கண்ணில் பாவையன்றோ | £ 2.00 |
| 8. பானுமதி | £ 1.75 |
| 9. இது ஓர் உதயம் | £ 1.75 |
| 10. கிழக்கு வெளுத்ததம்மா | £ 2.25 |
| 11. நாள் நல்ல நாள் | £ 2.50 |
| 12. உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா | £ 2.25 |
| 13. தண்ணீரிலே தாமரைப்பூ | £ 2.00 |
| 14. ராமன் தேடிய சீதை | £ 2.00 |
| 15. நின்னையே ரதி என்று | £ 1.75 |
| 16. ஒரு மலர் | £ 2.25 |
| 17. நிலாகாயும் நேரம் | £ 2.50 |
| 18. பொங்கட்டும் இன்ப உறவு | £ 2.75 |
| 19. பால்நிலா | £ 3.00 |
| 20. இனிவரும் உதயம் | £ 2.00 |
| 21. புன்னகையில் ஒரு உலகம் | £ 2.25 |
| 22. பூங்காற்று | £ 2.00 |
| 23. நாள் நல்ல நாள் | £ 2.50 |
| 24. அடிவாழை | £ 2.50 |
| 26. பொழுது விடிகிற வேளையிலே | £ 2.00 |
| 27. மாலை மயங்குற நேரம் | £ 2.50 |
| 28. தூய சுடர் வானொளியே | £ 1.75 |
| 29. கற்பனையோ அற்புதமோ | £ 2.50 |

ஏனைய நூல்கள்:—

| | |
|---|---|
| 1. அதிர்ஷ்ட விஞ்ஞானம் | £ 5.00 |
| 2. லிப்கோ டிக்ஷனரி (பெரியது) | £ 5.00 |
| 3. பாரதியார் கவிதைகள் | £ 3.00 |
| 4. திருக்குறள் (மு. வரதராஜன் உரை) | £ 1.00 |
| 5. திருக்குறள் (தமிழ்–ஆங்கிலம் இருநூல்கள்) | £12.00 |
| 6. தொல்காப்பியப் பூங்கா (கலைஞர் உரை) | £ 12.00 |

# இருபது ஆண்டுகளில் இலண்டனில் தமிழர் வணிகம்!

கடைசிப்பக்கம்

1981 முற்பகுதியில் இலண்டனில் வந்து இறங்குகிறேன். அப்போது அகதிகள் என்ற அந்தஸ்து இல்லாத காலம். இல.64, குருஸோ றோட்டில் ஒரு நண்பரின் வீட்டில் தற்காலிகமாகத் தங்கிக் கொண்டு இலண்டனில் ஒருவருட காலமாவது தங்கிவிடலாமா? என்ற எண்ணத்துடன் இருக்கிறேன். என்னை அழைத்துவந்த நண்பர் பிள்ளை அவர்களுக்கு மிச்சம், ரூட்டிங் றோட்டில் ஒரு சின்ன வியாபார நிறுவனமொன்று இருந்தது. அதுவும் சில நாட்களில் மூடப்பட்டு விட்டது. இங்கே படித்துப் பட்டம் பெறவந்தவர்களும், பட்டம் பெற்ற பின் இங்குவந்து தங்கியிருந்த டாக்டர்கள், நர்சுகளும், பொறியியலாளர்களும் மட்டுமே வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களில் எவரும் வியாபார நோக்கத்தில் இருக்கவில்லை. அப்போது அகதியாகவும் எவரும் இல்லை. அப்படி வந்த திருவாளர்கள் நீக்கிலாஸ், அருள்தாஸ் போன்றவர்களும் படித்துக் கொண்டு, பாகிஸ்தான் முதலாளிமாரின் கீழ் கெண்டக்கி போன்ற கடைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். தமிழ்க் குடும்பங்கள் பொங்கலுக்குப் பருப்புப் போட்டது போன்று ஆங்காங்கே சிதறிக் கிடந்தனர். அவர்களைக் காண்பதும் தமிழில் பேசுவதென்பதும் மிகவும் ஆசையான நிகழ்வு. பெற்றோல் நிலையங்களில், படிக்க வந்த எம்மவர்கள் பலர் சனி, ஞாயிறு நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் தொழில் பார்த்தனர். அந்தக் காலத்தில் லண்டனுக்கு வருகிறோமென்றால், ஏற்கனவே இங்குள்ளவர்கள் சொல்லும் செய்தி; 'இங்கு வந்து எவ்வித வேலையும் பெறமுடியாது' என்பதே. ஆனால் இந்த நிலை 1980க்குப் பின் முற்றிலுமாக மாற்றமடைந்தது.

அகதிகளாக எங்களை ஏற்றுக் கொண்டதன்பின் இலண்டன் முழுவதும் தமிழர்கள் வியாபித்து, பரவலாகக் குடியேறி ஏதோ அவர்களால் இயன்ற வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். தமிழ் மக்களுக்கான சாமான்கள் வாங்குவதானால் ஈஸ்காம், சவுத்ஹோல் போன்ற இடங்களுக்குத்தான் படையெடுக்க வேண்டியிருந்தது. அந்த நிலை மெல்ல மெல்லமாக மாற்றமடைந்து பகுதிக்கொரு கடையாக பரவத் தொடங்கியது. ஈஸ்ட்காமில் வாணி, 6குமார், லூசியத்தில் ஏ.ஜீ. மினிமார்க்கட், வில்ஸ்டன் கிறீனில் ஈரோ, ரூட்டிங்கில் சிவராஜ், விம்பிள்டனில் ஸ்பைஸ்வே என்பன ஆரம்பிக்கப்பட்டன. தமிழ் புத்தகமெதுவும் வாங்குவதானால் சவுத்ஹோலில் ஏ.பி.சீ. என்ற கடைக்குத்தான் போகவேண்டும். ஆச்சரியம் என்னவெனில் அந்தக் கடையில் தற்போது தமிழ் புத்தகங்கள் விற்கப்படுவதில்லை என்பதுதான். தமிழ்க் கடைகளுக்கு தமிழ்ப் புத்தகங்களை 'பட்டேல்' என்பவர் தருவித்து விநியோகம் செய்துவந்தார். அவர் இப்போதும் தொடர்ந்து செய்கிறார். அந்தக் காலகட்டத்தில் லீலா, றபீனா அடையாளமிட்ட பொருட்கள் இலங்கையிலிருந்து வந்து கொண்டிருந்தன. அதன்பின் படிப்படியாக அகதிகளாக வந்தவர்கள் கடுமையான உழைப்பின் தேட்டத்தில் கடைகள் திறக்க ஆரம்பித்தார்கள். குறிப்பாக சவுத்ஹோலில் துவாரகா, ஈஸ்ட்காமில் சீலன், வோல்த்தம்ஸ்ரோவில் குமரன், வெம்பிளியில் ஆங்கிலோ ஏசியன் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

இன்று இலண்டனில் காணுமிடமெல்லாம் ஈழத்தவரின் கடைகள் மலிந்துவிட்டன. ஒரே வீதியில் பத்துக் கடைகள் கூட உண்டு. இப்போது To Let என ஒரு கடை இருந்தால் அது நிச்சயம் தமிழர்களால் தான் எடுக்கப்பட்டு விடுகிறது எனலாம்.

முன்பு இருந்தவை எல்லாம் பலசரக்குக் கடைகள். புடவைக் கடைகள், நகைக்கடைகள் எதுவுமே 1995 வரை இருக்கவில்லை. ஆனால் இவைகள்தான் இப்போது கூடுதலாக வந்துள்ளன. எது எப்படியிருந்தாலும் மிகக் குறைந்த இலாபத்துடன் மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய Tesco, Sainsbury போன்ற பல்பொருள் அங்காடிகள் எம்மவர்களால் இதுவரை உருவாக்கப்படவில்லை. அப்படி உருவாக்கப்பட்டால் தமிழர்களுக்கு இன்னும் கூடிய பலன் கிடைக்கலாம்.

– நா. சிவானந்தசோதி

சிறுகதை, ஆரூடம் என்பவை அடுத்த இதழில் இடம்பெறும்.

Opening Soon

பத்மினி ஜீவலர்ஸின் புதிய வரவு

# KRISHNA TEXTILES



மங்களகரமான
திருமணப்புடவைகள்,
பட்டுவேட்டிகள், பரதநாட்டிய
ஆடைகள், அணிகலன்கள்,
பஞ்சாபிகள் மற்றும்
சிறுவர்களுக்கான கோட் சூட்
வகைகள்,
இந்தியா, சிங்கப்பூரில் இருந்து
தருவிக்கப்பட்ட நவநாகரீக
உடுப்பு வகைகள், அற்புதமான
ஆடை செலக்சன்கள், உங்கள்
மனங்கவரும் வர்ணங்களில்
பட்டுப்புடவைகள்

இவை அனைத்தும்
உங்களுக்காக
விரைவில் எதிர்பாருங்கள்!

882 London Road
Thorntonheath
Surrey CR7 7PB
Tel : 020 8664 3195




Printed by VASAN PRINTERS 020 8646 2885